Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 056 | வியாழக்கிழமை | தை 8 ஆம் நாள் 21 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# ராஜபக்ச அரசு மூலம் நீதிக்கு வாய்ப்பில்லை

## மாற்றுக் கொள்கைக்கான நிலையம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜனவரி 21

அரசின் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் நகர்வுகள் காரணமாக, இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை தற்போது இல்லாமல் போயுள்ளது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அதிருப்தி தெரிவித்தது. 19

## மேலும் 18 பேருக்கு மன்னாரில் தொற்று!

மன்னார், ஜன. 21

மன்னார் மாவட்டத்தில் மேலும் 18 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று புதன் கிழமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் மன்னார் மருத்துவமனை 19

## வவுனியாவில் 10 நாள்களின் பின் தொற்றுக்களில்லை

வவுனியா, ஜன. 21

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற பி.சி.ஆர் பரிசோதனைகளில் எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதியானது. கடந்த பத்து நாள்களின் பின் 19



## கொரோனா சாவு 274

கொழும்பு, ஜன. 21

இலங்கையில் கொரோனா தாக்கத்தால் மேலும் ஒருவர் பலியானார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் 19

## தமிழர்களின் மத உரிமையை குருந்தூரில் ஒடுக்கவில்லை!

கொழும்பு, ஜன. 21

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விகாரைகளைக் கொண்டு காணி பறிப்பு இடம்பெறுகிறது என தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடும் கருத்து முற்றிலும் தவறானதாகும். அரசியல் நோககங்களுக்காக இவர்கள் இனங்களுக்கிடையில் தவ 19

## வேதனையின் உச்சத்தில் சிறுபான்மை இன மக்கள்

### சபையில் ரிஷாத் கவலை



கொழும்பு, ஜன. 21

'இந்த ஆட்சியில் சிறுபான்மை இன மக்கள் வேதனையின் உச்சத்தில் வாழ்கின்றனர். அந்தளவுக்கு இந்த ஆட்சியில் அடக்குமுறைகள் தலைவிரித்தாடுகின்றன' இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் 19



## பதவியேற்றார் பைடன்

வொஷிங்டன், ஜன. 21

அமெரிக்க ஜனாதிபதியாக குடியரசுக் கட்சியின் வேட்பாளரான ஜோ பைடன் நேற்றுப் பதவியேற்றார். இலங்கை நேரப்படி நேற்று இரவு 10 மணியளவில் அவரது பதவியேற்பு இடம்பெற்றது. இந்திய வம்சாவழியினரான கமலா ஹரிஸ் துணை ஜனாதிபதியாகத் தெரிவானார். (விரிவு பக். 13)

## ராஜபக்சவினரை விரைவில் வீட்டுக்கு விரட்டியடிப்போம்

### சஜித் அணி சூளுரை

கொழும்பு, ஜன. 21

"பதவி ஆசையில், அதிகார வெறியில் அராஜக ஆட்சி நடத்தும் ராஜபக்சவினரை விரைவில் வீட்டுக்கு ஓடஓட விரட்டியடிப்போம்" இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். இது தொடர்பில் கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: 'நாட்டில் கடந்த 70 வருடகாலத்தில் இடம்பெற்ற அனைத்து நன்மை, தீமைகளுக்கும் சேனா 19

## நெடுந்தீவில் மூழ்கிய படகு

## இந்திய மீனவர் இருவரின் சடலங்கள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 21

கடந்த 18ஆம் திகதி பின்னிரவு நெடுந்தீவில் இருந்து சுமார் 8 கடல்மைல் தொலைவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாகச் சொல்லப்படும் இந்திய மீன்பிடிப் படகில் இருந்தவர்களில் இருவரின் சடலங்கள் மீட்கப் 17

## மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாம் தயார்!

### ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 21

ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் பேச்சு நடத்தி தீர்மானம் ஒன்றுக்கு வந்தால் 19

## தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை உடன் நிறுத்தவேண்டும் ராஜபக்ச அரசு

### நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 21

'வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை இலக்கு வைத்து நடத்தும் அடக்குமுறைகளை ராஜபக்ச அரசு உடன் நிறுத்த வேண்டும்' இவ்வாறு சபையில் வலியுறுத்தினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவ 19



## வாக்காளர் பெயர்ப்பட்டியல் ஏப்ரல் 30 இல் வெளியாகும்

கொழும்பு, ஜன. 21

2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் ஏப்ரல் 30ஆம் திகதி வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். 17

## முல்லைத்தீவு குருந்தூர்மலை
# ஆதிசிவன் ஆக்கிரமிப்புக்கு சைவ ஆதீனங்கள் கவலை

முல்லைத்தீவு, ஜன. 21

**இலங்கையில் தொடர்ச்சியாக சைவ மக்களின் வழிபாட்டிடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுவரும் சம்பவங்கள் வரிசையில் அண்மையில் முல்லைத்தீவு குருந்தூர் மலை ஆதிசிவன் வழிபாட்டிடம் ஆக்கிரமிக்கப்பட்டு பௌத்தர்களே வசிக்காத பிரதேசத்தில் புத்த பிரான் சிலை வைக்கப்பட்டு உள்ளூர் சைவ மக்களின் வழிபாடுகள் மறுக்கப்பட்டு இருப்பது மனதுக்கு வேதனை தருகின்றது என்று சைவ ஆதீனங்களின் பேரவை கவலை தெரிவித்துள்ளது.**

இது பற்றிய பேரவை அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஏற்கனவே திருகோணமலையின் கன்னியா, மன்னார் திருக்கேதீச்சரம், வவுனியா வெடுக்குநாறி மலை, முல்லைத்தீவு செம்மலை ஆகிய இடங்களில் மிகப் புராதன சைவ வழிபாட்டிடங்களில் இவ்வாறான பிரச்சினைகள் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது குருந்தூர் மலையில் தோற்றுவிக்கப்பட்டு இருக்கும் ஆக்கிரமிப்புக்கள், ஆதி சிவ வழிபாடுகளுக்கான ஊறுபாடுகள் சைவத் தமிழ் மக்களின் மனங்களில் ஆறா வடுவை உருவாக்கி மத நல்லிணக்கத்துக்குப் பெரும் பங்கம் விளைவிக்கும் செயற்பாடாகும்.

சைவம் அன்பே சிவம் எனும் உயரிய தத்துவத்தை சுமந்து அனைத்து மக்கள் குழுமத்துடனும் அன்பு வழியில் சகோதரத்துவத்தைப் பேணும் தமிழர்களினுடைய ஆதி நெறியாகும்.

பௌத்தமும் புத்தபிரானால் உருவாக்கப்பட்ட அன்பு நெறி என்ற அடிப்படையில் பௌத்த குருமார்களும் அரசியல் தலைவர்களும் எம்மிடையே முரண்பாட்டை மேலும் ஆழமாக்கும் இந்தச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வர வேண்டும்.

பல பௌத்த குருமார்கள் மத நல்லிணக்கத்துக்காக நலிவுற்ற மக்களின் பிரச்சினைகளுக்காக குரல்கொடுத்து வருவதை நாம் அறிவோம்.

இந்தச் சந்தர்ப்பத்திலே அந்தக் குரல்கள் மேலும் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதே எமது பேரவா.

உலகம் முழுதும் கொடிய நோய்த் தாக்கத்துக்கு உட்பட்டு அவலத்தை முடக்கத்தை சந்தித்து வரும் நிலையில் எம்மிடையே மீண்டும் மீண்டும் தோற்றுவிக்கப்படும் முரண்பாடுகள் எம் அனைவரது சமாதான சகவாழ்வையும் பாதிக்கும் எனும் உண்மையை மனங்கொள்வோம்.

அழகிய இத் தீவிலே ஒவ்வொரு மத நெறியையும் மற்றவர் மதித்து அந்தந்த பிரதேசங்களின் பூர்வீக சமயப் பண்பாடுகள், வழிபாட்டிங்கள் தொடர்ந்து பேணுதலையும் ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்படுத்தலையும் உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அனைவரும் குறிப்பாக பௌத்த மத குருமார்கள் முன்னின்று உழைக்க வேண்டுகின்றோம். என்றுள்ளது.

(த-இ)

## மன்னாரிலுள்ள சட்டத்தரணிகள் நீதிமன்றில் முன்னிலையாகார்

தலைமன்னார், ஜன. 21

மன்னாரில் நாளுக்குநாள் கொரோனாத்தொற்று அதிகரித்துவரும் நிலையில், மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தினர் சில நாளகளுக்கு நீதிமன்றில் முன்னிலையாவதில்லை என்று தீர்மானித்துள்ளனர். இது பற்றி மன்னார் நீதிவான்களுக்கும் அறிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. கொரோனாத் தொற்றாளர்கள் இனம் காணப்படுகின்றமை அதிகரித்துள்ளமையோடு ஒருவர் இறந்துள்ளார். இந்தநிலையிலேயே, தங்களின் சுய பாதுகாப்புக்காக ஒரிரு தினங்களுக்கு நீதிமன்றில் வழக்குகளுக்கு முன்னிலையாவது இல்லை என்று தீர்மானித்துள்ளனர். நேற்றுத் தொடக்கம் இந்த நடைமுறையை மேற்கொள்ளவிருந்தபோதும் வழக்குக்கு வந்திருந்தவர்களின் நலன்கருதி ஒரிரு சட்டத்தரணிகள் தவிர ஏனைய சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகாது நீதிமன்றுக்கு வந்துவிட்டு உடன் திரும்பிவிட்டனர். இன்று வியாழக்கிழமை தொடக்கம் சகல சட்டத்தரணிகளும் நீதிமன்றங்களுக்குச் சமூகமளிக்க மாட்டார்கள் என்று சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர். எனினும், நீதிமன்றங்கள் வழமைபோன்று செயற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-60)

## போராடியவர்கள் தேறி வருகின்றனர்

கிளிநொச்சி, ஜன. 21

9 நாள்களாக உணவு தவிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட இரண்டு தொழிலாளர்களும் அம்புலன்ஸில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தேறி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

(த-6)

# ராஜபக்ச அரசுக்கு எதிராக ஓய்வூதியர்கள் ஆர்ப்பாட்டம்



கொடிகாமம், ஜன. 21

2016 ஜனவரி தொடக்கம் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஓய்வு பெற்றுச் சென்றிருந்த சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஓய்வூதியர்களுக்கு தற்போதைய அரசு ஓய்வூதியம் வழங்கவில்லை என்றும் ஓய்வூதியத்தை விரைவில் வழங்குமாறு கோரியும் அவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவுக்கு முன்பாக போராட்டம் நடத்தினர். ஓய்வூதிய உரிமையைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு ஓய்வூதியத்தை வழங்காமல் இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டது. எனினும், சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று அமைப்பு தெரிவித்தது. இந்த நிலையில் ஓய்வூதியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாநாட்டில் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் உட்பட பல்வேறு பட்ட தொழிற்சங்கத் தலைவர்களும் ஓய்வூதியர்களும் கலந்துகொண்டனர் என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பிரதித் தலைவர் தெரிவித்தார்.

(த-159)

## நினைவுத்தூபி அமைக்க
# அத்திபாரம் வெட்டினர் யாழ்.பல்கலை மாணவர்



யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கான அத்திபாரம் வெட்டும் பணியில் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஈடுபட்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கடந்த 8 ஆம் திகதி இரவு பல்கலைக்கழக நிர்வாகத்தால் இடித்து அழிக்கப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து தொடர் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

பின்னர் சில மாணவர்களால் உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மாணவர்களின் போராட்டத்துக்கு உலகின் பல இடங்களிலிருந்தும் ஆதரவு பெருகியதால் கடந்த 11 ஆம் திகதி, தூபி இடித்து அழிக்கப்பட்ட அதே இடத்தில் மீண்டும் தூபி அமைப்பதற்கு மாணவர்களின் பங்குபற்றலோடு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா அடிக்கல் நட்டிருந்தார்.

இடித்து அழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, அனைவருடைய பங்களிப்புடனும் மீண்டும் அமைப்பதற்கு நிதி உதவி வழங்குமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கமைய தூபி அமைப்பதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(த20)

# புத்தர் சிலையுடன் முல்லையில் மூவர் கைது



முல்லைத்தீவு, ஜன. 21

முல்லைத்தீவு நகரப் பகுதியில் பெறுமதியான புத்தர் சிலையை விற்பனைசெய்தனர் என்ற குற்றச்சாட்டில் ஹற்றனைச் சேர்ந்த மூவரை சிறப்பு அதிரடிப்படையினர் நேற்றுக் கைதுசெய்தனர்.

தென்பகுதியைச் சேர்ந்த குறித்த நபர்கள் முகப்புத்தகம் ஊடாக 6 கிலோகிராம் வெண்கல புத்தர் சிலையை தங்கச் சிலை என்றுகூறி விற்பனை செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து, அங்குசென்ற அதிரடிப்படையினர் சிலையை மீட்டு, மூவரையும் கைதுசெய்தனர். அவர்கள் சட்டநடவடிக்கைக்காக முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(த-19)

# குருந்தூரில் விகாரை இருந்ததென கதையளக்கிறார் அமைச்சர் விதுர

## கண்டிக்கின்றார் சரவணபவன்

**யாழ்ப்பாணம், ஜன. 21**

**1932ஆம் ஆண்டு வர்த்தமானியில் குருந்தூர் மலைப் பகுதியில் 'குருந்தசேவ' விகாரை இருந்தது என்று இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கூறியிருக்கின்றார். ஆனால் அங்கு சோழர்கள் காலத்தில் சிவன் கோயில் அமைந்திருந்தது என அம்மக்களிடையே நிலவிவரும் பாரம்பரியமான கதைகள் தெரிவிக்கின்றன. அதற்குச் சான்றாக மலையின் உச்சிப் பகுதியில் கருங்கல் தூண்களின் இடிபாடுகள் காணப்படுகின்றன. விகாரைகள் கருங்கற் தூண்களால் அமைக்கப்படுவதில்லை என்பதால் அங்கு விகாரை அமைந்திருக்கச் சாத்தியமில்லை.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குருந்தூர்மலை தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கில், அங்குள்ள மக்கள் வழிபாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் எந்தவொரு தரப்பும் புதிய கட்டுமானங்களை மேற்கொள்ளக்கூடாதென வும் கட்டளையிடப்பட்டிருந்தது.

ஆனால் சூலம் பிடுங்கி எறியப்பட்டது. அவர்களின் வழிபாட்டுரிமைக்கு குந்தகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய கட்டுமானத்தை அமைக்க அடிக்கல்லும் நடப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் தலைமையில் தொல்பொருள் திணைக்களம் நீதிமன்றக் கட்டளையை மீறியுள்ளது. நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ரஞ்சன் ராமநாயக்காவுக்கு நான்கு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்த சட்டம் இந்த விடயத்தில் நீதிமன்ற அவமதிப்புக்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதுதான் இப்போதும் மக்களிடம் எழும் கேள்வியாகும்.

1980ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் தண்ணிமுறிப்பு, குமுழமுனை ஆகிய பிரதேசங்களில் மணற்கிண்டி, பதவியா பகுதிகளிலுள்ள சிங்களக் கூலியாள்கள் வந்து வாடி போட்டுத் தங்கியிருந்து அறுவடை வேலைகளைச் செய்வதுண்டு. அவர்கள் தாங்கள் தங்கியிருக்கும் காலப்பகுதியில் வழிபடுவதற்கு மலையடிவாரத்திலிருந்த ஒரு அரசமரத்தின் கீழ் புத்தர் சிலையை வைத்தனர். போராட்டம் ஆரம்பமான பின்பு சிங்களவர்கள் அங்கு வருவதுமில்லை. புத்தர் சிலையும் அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டு விட்டது.

ஆனால் அந்தப் பிரதேச தமிழ் மக்கள் கால்நடைகளின் காவற்தெய்வம் எனக் கருதப்படும் ஐயனாரை அவ்விடத்தில் வைத்து பரம்பரையாக வழிபட்டு வருகின்றனர்.



ஏற்கனவே வெடுக்குநாறி லிங்கேசுவரர் ஆலயம், செம்மலை நீராவியடிப்பிட்டி பிள்ளையார் கோயில் என்று மேற்கொள்ளப்படும் இந்து வழிபாட்டிடங்களை பௌத்தமயப்படும் ஆக்கிரமிப்பின் அடுத்த நடவடிக்கையாகவே குருந்தூர்மலைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது ஒரு பகுதி மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்றளவில் அடக்கி விட முடியாது. இது தமிழ் மக்களின் பாரம்பரிய வழிபாட்டுரிமைக்கும் மத சுதந்திரத்துக்கும் விடுக்கப்பட்ட சவாலாகும்.

இந்த அநீதியைத் தடுத்து நிறுத்த கட்சி, மத பேதங்களைக் கடந்து அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் ஓரணியில் திரளுமாறு அழைக்கின்றோம் - என்றுள்ளது. (ஒ)

# வாக்கெடுப்பை நிராகரித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஜன. 21

சீனி இறக்குமதி வரி உள்ளிட்ட விசேட வர்த்தகப் பொருள்களுக்கான வரிகளை அரசு அண்மையில் திருத்தியமைத்தது. அதற்கான, வர்த்தமானி நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், சீனி இறக்குமதி வரித் திருத்தம் தொடர்பான வர்த்தமானிக்கு அனுமதி வழங்க வாக்கெடுப்பு அவசியம் என்று எதிர்க்கட்சியினர் கோரினர். சபாநாயகரும் சபை முதல்வரும் அதற்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை. (ஒ.இ)



முல்லைத்தீவு விவசாயக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கான வினைத்திறனான கணக்கு வைப்புத் தொடர்பான பயிற்சி நேற்றுமுன்தினம் செம்மலையில் இடம்பெற்றது. மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனப் பணிப்பாளருடன் இணைந்து முல்லைத்தீவு விவசாயக் கூட்டுறவுச் சங்கம் முன்னெடுத்த இந்தப் பயிற்சிக்கு. உலகத் தொழிலாளர் அமைப்பு அனுசரணை வழங்கியது. (ப)

*சாட்சிகளை அச்சுறுத்திய*

# மேஜர் பிரசன்னவும் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஜன. 21

சாட்சிகளை அச்சுறுத்தும் விதத்தில் கருத்துத் தெரிவித்ததற்காக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மேஜர் சட்டத்தரணி அஜித் பிரசன்ன 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளில் கொழும்பு மேலதிக நீதிவானால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 13ஆம் திகதி விதித்த உத்தரவை நடைமுறைப்படுத்தி சந்தேகநபரை பிணையில் விடுவித்த மேலதிக நீதிவான், வழக்கை எதிர்வரும் 19 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழங்கிய வாக்குறுதிக்கமைய, நீதிமன்றத்தில் இடம்பெறும் எந்த வழக்கு நடவடிக்கையையும் ஊடகங்களுக்கு அறிவிக்கக் கூடாதென மேலதிக நீதிவான் சந்தேகநபருக்கு உத்தரவிட்டார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஊடக சந்திப்பொன்றை நடத்தி, 11 இளைஞர்களைக் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்கின் சாட்சியாளர்களை அச்சுறுத்தும் வகையில் கருத்து தெரிவித்த குற்றச்சாட்டில் கொழும்பு மேலதிக நீதிவானால் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ஒ.இ)

# சடலம் மீட்பு

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கறுவங்கேணி பிரதேசத்தில் வீதி ஓரத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தார்.

கறுவங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய வேலாயுதப்பிள்ளை தங்கராசா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். குறித்த நபர் சம்பவதினமான நேற்று இரவு வீட்டை விட்டு வெளியேறிய நிலையில், வீட்டிலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் வீதி யோரத்தில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பவிசாரணையில்தெரிய வந்தது. இதனையடுத்து சம்பவம் தொடர்பில் தடவியல் பிரிவு வரவழைக்கப்பட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி5)

குருந்தூர்

# தொல்பொருள் ஆராய்ச்சியில் பல்கலையையும் இணையுங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 21

குருந்தூர் ஆதி சிவன் ஐயனார் கோயில் பகுதியில் தற்போது தொல்லியற் திணைக்களத்தால் ஆராய்ச்சி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்பொருள் விரிவுரையாளர்களையும், யாழ்ப்பாணப் பிராந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்கள பணியாளர்களையும் இணைத்துக்கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்க ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், தொல்பொருள் திணைக்களத்தின் ஆலோசனையில் குருந்தூர் மலையில் கடந்த திங்கட்கிழமை ஆராய்ச்சிப் பணிகள் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அந்த மலையிலிருந்த இந்துக் கடவுளின் அடையாளங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அகழ்வுப் பணியில் யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் விரிவுரையாளர்களையோ யாழ். பிராந்திய தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களையோ உள் வாங்காமல் ஆரம்பித்தமையால் தமிழ் மக்களும் நானும் மிகுந்த வேதனை அடைந்துள்ளோம். ஆராய்ச்சி பணி வெளிப்படையாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்பொருள் பீடத்தினரையும் யாழ்ப்பாண பிராந்திய தொல்பொருள் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர்களையும் இணைத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன், என்றுள்ளது. (ஒ.56)

# உற்பத்தியாளரை பாதுகாக்க நல்லாட்சி அரசு தவறியது

## அமைச்சர் பந்துல குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன.21

நல்லாட்சி அரசு பாதுகாக்கத் தவறிய உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கும், தேசிய பொருளாதாரத்துக்கும் கோத்தாபய தலைமையிலான அரசு முன்னுரிமையளித்துள்ளது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதி அமைச்சின்கீழ் இருக்கும் விசேட வியாபார பண்ட அறவீட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நுகர்வோர், உற்பத்தியாளர் என்ற இரு தரப்பினரையும் பாதுகாக்கும் வகையில்தான் அரசாங்கம் வரிக்கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் பிரகாரம்தான் விசேட வியாபாரப் பண்டங்களுக்கான வரிமுறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேவையான நேரத்தில் இந்தச் சட்டத்தை மறுசீரமைக்க முடியும் என்பதுடன், சட்டம் திருத்தப்பட்டு ஆறுமாத காலத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

சுதேச உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே விசேட வியாபாரப் பண்டங்களுக்கான வரிமுறைமை 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் இந்த நாட்டின் இலட்சக்கணக்கான விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையும் பொறுப்புமாகும்.

ஆனால், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நாட்டின் தேசிய உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்படவில்லை -என்றார். (வ-இ)

# தென்கொரியாவில் சிக்கியிருந்தோர் தாயகம் வந்தனர்

கொழும்பு, ஜன.21

கொரோனா அச்சம் காரணமாக தென்கொரியாவில் சிக்கியிருந்த 245 இலங்கையர் தாயகம் திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்று காலை சிறப்பு விமானத்தின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ளவர்களை நாட்டுக்கு அழைக்கும் அரசின் விசேட வேலைத்திட்டத்துக்கு அமையவே இவர்கள் அழைத்து வரப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# தம்மிக்கவை கைதுசெய்ய நடவடிக்கை



கேகாலை, ஜன.21

கொரோனாத் தடுப்பு மருந்து என ஒரு வகைப் பானத்தை அறிமுகம் செய்த கேகாலை ஆயுள்வேத வைத்தியர் எனக் கூறப்படும் தம்மிக்க பண்டாரவை கைது செய்ய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கேகாலை பிரதேசத்தில் மருத்துவர் ஒருவர் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் தம்மிக்க மீது பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார் அவரைக் கைதுசெய்யவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-இ)

# ரஞ்சனின் சிறைவாசத்துக்கு கட்சி உறுப்பினர்களே பொறுப்பு

## அமைச்சர் மஹிந்தானந்த சாடல்



கொழும்பு, ஜன.21

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத்தீர்ப்புக்கு ஒட்டுமொத்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுமே பொறுப்பு. அவர்களின் கோரிக்கைக்கமையவே ரஞ்சன் வழக்குகள் தொடர்பில் நீதிபதிகளுடன் உரையாடல்களை மேற்கொண்டிருந்தார் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ரஞ்சனுக்கு விதிக்கப்பட்டுள்ள தீர்ப்புக்காக நானும் வருந்துகிறேன். அவர் மீதான அனுதாபத்தால் அவருக்கு எதிராக நான் தொடுத்திருக்கும் 2 வழக்குகளை மீளப்பெறத் தீர்மானித்துள்ளேன். அந்த வழக்குகளின் தீர்ப்பு வழங்கப்பட்டால் ரஞ்சன் மேலும் 4வருடங்கள் சிறையில் இருக்க வேண்டிவரும்.

ரஞ்சனுக்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சக்தியினர் கதைப்பதில் நியாயம் உள்ளது. ஏனெனில் கடந்த அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்காக செயற்பட்டதன் விளைவையே ரஞ்சன் ராம நாயக்க இன்று அனுபவிக்கிறார்- என்றார். (வ-இ)

# நாட்டின் பொருளாதாரம் 2021 இல் மீண்டெழும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.21

இலங்கையின் பொருளாதாரம் 2021 ஆம் ஆண்டில் சுமார் 5 தொடக்கம் 6 சதவீத வளர்ச்சியுடன் வலுவானதாக மீண்டு வரும் என்று இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஸ்மன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய பணவியல் கொள்கை சூழல் பொருத்தமானது என்று நாணய சபை கருதுகிறது. 2020 ஆம் ஆண்டில் கடன் விகிதங்கள் கடுமையாகக் குறைந்துவிட்டன.

மேலும் உள்நாட்டு பணச் சந்தையில் பராமரிக்கப்பட்டு வரும் அதிகப்படியான பணப்புழக்கத்துடன் சந்தை கடன் விகிதங்களில் மேலும் குறைப்பை எதிர்பார்க்கிறோம்.

மேம்பட்ட வணிகச்சூழல் மற்றும் குறைந்த வட்டி விகிதங்களுக்கு பதிலளிக்கும் விதமாக தனியார் துறை கடன் வளர்ச்சியில் முடக்கம் இருப்பதைக் கண்டோம்.

பொருளாதாரத்தின் வெளிப்புறத் துறை இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பதிவு செய்துள்ளது.

தொழிலாளர்கள் அனுப்பும் பணம் 7 பில்லியன் அமெரிக்க டொலரைவிட அதிகமாக உள்ளது.

அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் சேவைக் கடமைகளை பூர்த்திசெய்த போதிலும், 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் உத்தியோகபூர்வ இருப்புக்கள், 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 5.7 பில்லியன் அமெரிக்க டொலராக பராமரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# கன்னத்தில் அறைந்தவரால் சபை அமர்வில் சர்ச்சை

மிஹிந்தலை, ஜன.21

மிஹிந்தலை பிரதேச சபையின் அமர்வில் குடிபோதையில் இருந்த உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவரின் கன்னத்தில் அறைந்துள்ளார். இதையடுத்து அங்கு பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் இந்திக ருக்ஷன் ராஜபக்சவே இவ்வாறு கன்னத்தில் அறைந்துள்ளார்.

இதையடுத்து சபையின் நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். தொடர்ந்து இந்திகவை கைது செய்த பொலிஸார் மிஹிந்தலை பிராந்திய மருத்துவமனையில் அவரை அனுமதித்தனர். அவர் போதையில் இருந்தமை பரிசோதனையின் மூலம் தெரியவந்தது. இதையடுத்து மிஹிந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறனர். (வ-இ)

# பணம் பறிக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜன.21

இணையவழியூடான கற்பித்தல் செயற்பாடுகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி பிரத்தியேக வகுப்புக்களில் மாணவர்களை பலவந்தமாக இணைத்து பணம் கேட்கும் ஆசிரியர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். இணையவழியூடாக நடைபெற்ற அமைச்சரவை தீர்மா னங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். கொவிட் அச்சுறுத்தலால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு பாதகம் ஏற்படக் கூடாது என்பதற்கான மாற்று வழியாகவே இணையவழி கற்பித்தல் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதைத் தமது பிரத்தியேக வகுப்புக்களுக்காக ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொள்வார்களாயின் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும், என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சில்லறை விற்பனையில் இலங்கை!

மிக அண்மைக்காலத்தில் சுற்றுலாவிகளின் கனவுக் கடற்கரையாக மாறியிருந்த இடங்களில் இலங்கையின் மாத்தறையில் உள்ள மிரிஸ்ஸ மிகமுக்கியமானது. அங்கு கடல்நடுவே நீட்டிக் கொண்டிருக்கும் சிறு நிலத்திட்டே அப்படி ஒரு கவர்ச்சியை மிரிஸ்ஸவுக்கு அதீத வனப்பைக் கொடுத்திருந்தது. எந்த நிலத்திட்டு மிரிஸ்ஸவின் அடையாளமாக இருந்ததோ அதே நிலத்திட்டு இப்போது கூறு போட்டு, சிமெந்துத் தூண்களால் எல்லையிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு விட்டது.

இலங்கை பல கூறுகளாக்கப்பட்டு, மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருப்பதற்கு மிகச் சமீபத்திய உதாரணம் தான் மிரிஸ்ஸ நிலத்திட்டு. இதற்கு முன்னரே துறைமுகங்கள், துறைமுக நகர், காலிமுகத்திடல் என்று பல பகுதிகள் சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் விற்கப்பட்டு விட்டன. இன்னும் சில விற்கப்படும் நிலையில் உள்ளன. இந்த வரிசையில் இப்போது யாழ்ப்பாணத்தின் நயினாதீவும், அனலைதீவும் மாறக்கூடிய அபாயம் எழுந்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பை உருவாக்குவதற்காக சீன நிறுவனமொன்றுக்கு இந்த இரு தீவுகளும் வழங்கப்பட்டுவிட்டன. பொதுவாகவே காற்றாலை, சூரியகலம் போன்ற புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி பொறிமுறைகளை அமைக்க முன்னர், அந்தந்தப் பகுதி மக்களின் சம்மதத்தைப் பெறவேண்டியது அவசியம். ஆனால் அப்படி எந்தவொரு விதத்திலும் மக்களின் அபிப்பிராயத்தைப் பெறாமலேயே நயினாதீவும், அனலை தீவும் சீனாவுக்கு அடகுவைக்கப்பட்டுள்ளன. முதலில் நிறுவனங்களை அமைக்கவென கால்பதிக்கும் சீன நிறுவனம் காலப்போக்கில் சீனத் தொழிலாளர்களை கொண்டு வரும். அவர்கள் தங்கவென குடியிருப்புகளை உருவாக்கும். சீனமொழி அறிவுப்புப் பலகைகள் முளைக்கும். பின்னர் முற்றாகவே நயினாதீவும், அனலைதீவும் சீனாவின் காலனித்துவ தீவுகளாகிவிடவும் கூடும்.

இத்தனைக்கும் இலங்கையின் பூர்வீக வரலாற்றோடு பின்னிப்பிணைந்தவை இவ்விரு தீவுகளும். நயினாதீவுக்கு புத்தர் எழுந்தருளியதாகக் கூட பௌத்தர்கள் சொல்லிக்கொள்வார்கள். ஆதிசிவன் கோயில் கொண்ட பூமியையே புத்தவிகாரை இருந்ததாக இட்டுக்கட்டி பிடிக்க முனையும் இதே அரசு, புத்தரே வந்தார் என ஐதிகம் சொல்கின்ற தீவொன்றை சீனாவுக்கு விட்டுக் கொடுக்க எப்படி முன் வந்தது? காரணம், காசு மட்டுமே.

கோத்தாபய ஜனாதிபதியாக வந்த ராசியோ என்னவோ, கூடவே கொரோனாவும் வந்துவிட்டது. உலக வல்லரசுகளின் பொருளாதாரத்தையே மிதித்த கொரோனாவுக்கு, கொசு போன்ற இலங்கை எம்மாத்திரம்? கஜானா காலியாகிவிட்டது. ஆகவே, எதையாவது விற்றுச்சுட்டுத்தான் அரசநிர்வாகத்தை கொண்டிழுக்க முடியும். அதனாலேயே எவற்றையெல்லாம் விற்றுக் காசாக்க முடியுமோ அவற்றையெல்லாம் விற்கத் தொடங்கியுள்ளது கோத்தா அரசு. ஆனால் கொழும்புத்துறைமுக கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு எழுந்த எதிர்ப்பைப் போல, மற்றைய இடங்கிலும் எழலாம் என்பதும் அரசுக்குத் தெரியும், எனவே நேரடியாக நாட்டை அடகுவைக்கிறோம் என்று காட்டிக் கொள்ளாமல், புதிய திட்டங்களைக் கொண்டு வருகிறோம் என்ற போர்வையில் அந்த இடங்களை சீனா போன்ற தன் எஜமானிய நாடுகளுக்கு காணிக்கையாக்கிவிட்டு, கைமாற்றாக கடனை வாங்கிக் குவிக்கத் தொடங்கியுள்ளது. இப்படியேபோனால், கோத்தா அரசின் ஆட்சி முடிவில் ஒட்டுமொத்த இலங்கையும் விற்கப்பட்டிருக்கும். அப்படி ஒரு காலம் வரும்நாள் வெகுதொலைவில் இல்லை.

### இன்றைய கருத்தோவியம்




# வெளிநாடுகளில் உள்ள இலங்கையர் தொடர்பில் அரசுக்கு அக்கறையில்லை

## தலதா அத்துகோரல எம்.பி குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜன.21**

**ஜனாதிபதித் தேர்தலின்போது, வாக்களிப்பதற்காக வெளிநாடுகளில் பணிபுரிந்து வருபவர்கள் அனைவரும் பெரும் வரவேற்புடன் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். ஆனால் தற்போது வைரஸ் பரவலுக்கு மத்தியில் அவர்கள் பாதிப்படைந்துள்ள நிலையில், அவர்களை அழைத்து வருவது தொடர்பில் அரசுக்கு எந்த அக்கறையும் கிடையாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல குற்றஞ்சாட்டினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; போரை முடிவுக்கு கொண்டு வந்தவரால் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கும் தீர்வுகாண முடியும் என்றே சிலர் எண்ணியிருந்தனர். ஆனால் ஜனாதிபதியின் செயற்பாடு அந்த எண்ணத்தைப் பொய்யாக்கியுள்ளது. 'கிராமத்துடன் உரையாடல்' என்று கூறிக்கொண்டு ஜனாதிபதி பல கிராமங்க



ளுக்குச் சென்று வருகின்றார். இந்த இடங்களுக்குச் சென்று அவர் கூறுவது என்ன? தான் கூறுவதுதான் சுற்றறிக்கையாக வெளிவரும் என்று கூறியிருந்தார்.

இதேவேளை அண்மையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோவுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பேசியிருந்தார். இது நாட்டின் ஜனாதிபதி ஒருவருக்கு பொருத்தமான பேச்சுக் கிடையாது. இதனை நாம் கண்டிப்பதுடன் , எமது அதிருப்தியையும் ஜனாதிபதிக்கு தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றார். (ப)

# புதிய வியாபாரிகள் சுகாதார பிரிவின் அனுமதியை பெறவும்

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் உள்ள சந்தைகளில் புதிதாக வியாபாரம் செய்ய வருவோர் சம்பந்தப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;


கொரோனாத் தொற்றுக் காரணமாக ஏற்கனவே உள்ள வியாபாரிகளைத் தவிர வேறு வியாபாரிகள் எவரும் சந்தைகளுக்குள் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அத்துடன் மீன் மற்றும் மரக்கறி சந்தைகளில் வியாபாரிகள் உரிய சுகாதார விதிகளை பின்பற்ற வேண்டும். சந்தைக்கு வருகைதரும் நுகர்வோர் முகக்கவசம் அணிந்து வருவதோடு சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும் - என்றனர். (ஐ-17)

# சுகாதார விதிமீறல்: கைதுகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.21

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 31பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.



கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 662 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அதில் 2 ஆயிரத்து 500 நபர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி வடக்கின் சர்வ மதத் தலைவர்கள் மனு



**யாழ்ப்பாணம், ஜன.21**

**சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு வடக்கில் உள்ள சர்வமதத் தலைவர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.**

குறித்த விடயம் தொடர்பாக மதத் தலைவர்களின் கையெழுத்துக்கள் அடங்கிய மனு ஒன்று நேற்று முன் தினம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி 'குரல் அற்றவர்களின் குரல்' அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த மாதம் யாழ் மாவட்டத்தில் உள்ள சர்வ மதத் தலைவர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக வடக்கில் உள்ள சர்வ மதத் தலைவர்களின் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதாக தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் நேற்றுமுன்தினம் மதத் தலைவர்களிடம் கையெழுத்துக்கள் பெறப்பட்டு நேற்று யாழ்.ஸ்ரீநாக விகாரை விகாராதிபதி மீஹாகஜதுரே ஸ்ரீ விமலதேரர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மதத்தலைவர்களின் கையெழுத்துக்கள் அடங்கிய மனுவை குரலற்றவர்க ளின் குரல் அமைப்பின் இணைப்பாளர் மு.கோமகன், மீஹாகஜ துரே ஸ்ரீ விமலதேரரிடம் வழங்கிவைத்தார். (ப)

## முல்லைத்தீவில் தொடர்கிறது யானைகளின் அட்டகாசம்!

முல்லைத்தீவு.ஜன.21

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காட்டுயானைகளின் அட்டகாசத்தால் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, மாந்தை கிழக்கு பிரதேசத்தில் அம்பாள்புரம் பகுதியில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் பயன்தரு மரங்கள் பல அழிக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அம்பாள்புரம் 6 ஆம் கட்டைப்பகுதியில் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் காய்ப்பதற்கு தயாரான நிலையிலிருந்த 15 தென்னங்கன்றுகள் யானையால் நேற்றுமுன்தினம் அழிக்கப்பட்டுள்ளன.

தற்போது காய்க்கும் பருவத்தில் பாளை தள்ளிய நிலையில் இருந்த தென்னை மரங்களையே யானைகள் அழித்துள்ளன என்று குறித்த விவசாயி கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கிராம அலுவலரிடமும், வன இலாகா திணைக்களத்திடமும் முறையிட்டுள்ள போதும் காய்க்கும் தென்னை என்றால்தான் இழப்பீடு கிடைக்கும் என்று வனஇலாகா திணைக்களம் தெரிவித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-19)

## விபத்துக்களில் இருவர் காயம்

சாவகச்சேரி,ஜன.21

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் இரு பெண்கள் காயமடைந்தனர்.

இந்த விபத்துக்கள் மறவன்புலவு மற்றும் மீசாலை வடக்கு ஆகிய பகுதிகளில் இடம்பெற்றன.

மறவன்புலவு பகுதியில் 23 வயதுப் பெண்ணும், மீசாலை வடக்கில் 38 வயதுப் பெண்ணும் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். (ஐ-9)

## வீட்டுக்குள் புகுந்து தாலிக்கொடி அறுப்பு

வவுனியா, ஜன.21


பட்டப்பகலில் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் பெண்ணின் தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் வவுனியா ஓமந்தை சேமமடுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இவ்வாறு கொள்ளையிடப்பட்ட தாலிக்கொடி 7 பவுண் நிறையானது என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-110)

## குளத்தில் மிதந்த மாட்டின் தலை; சட்டவிரோத மாடறுப்பு அம்பலம்

### மக்கள் கவலை



வவுனியா, ஜன.21

வவுனியா, தட்சணாங்குளம் பகுதியில் சட்டவிரோத மாடு அறுப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன், வெட்டப்படும் மாடுகளின் தலைகள் குளத்தினுள் வீசப்பட்டு வருகிறது என்று அந்தப் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

வவுனியா, தட்சணாங்குளம் பகுதியில் உள்ள குளத்தை அண்டிய பகுதிகளில் மாலை மற்றும் அதிகாலை வேளைகளில் சட்டவிரோதமாக மாடுகள் வெட்டப்படுவதுடன், வெட்டப்படும் மாடுகளின் தலைகள் மற்றும் கழிவுகள் அப்பகுதியில் உள்ள குளத்தினுள் வீசப்பட்டு வருகின்றன.

இவற்றைக் காகம் முதலான பறவைகளும், நாய்களும், இழுத்துச் செல்வதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய நிலையும் உருவாகியுள்ளது. விவசாயத் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் குளத்து நீரும் மாசுபடுகின்றது.

அடிக்கடி இப்பகுதியில் சட்டவிரோத மாடு வெட்டும் செயற்பாடுகள் இடம்பெற்று வரும் நிலையில் உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் - என்றனர். (ப-18)

## யானைகள் நடமாட்டத்தை உடன் கட்டுப்படுத்தவும்

### ஜெயபுரம் மக்கள் கோரிக்கை

வன்னேரிக்குளம்.ஜன.21

கிளிநொச்சி - ஜெயபுரம் கிராமத்தில் யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துமாறு பூநகரி பிரதேச செயலரிடம், ஜெயபுரம் வடக்கு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

ஜெயபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சுண்ணாவில் பகுதியில் அமைந்துள்ள 50 ஏக்கர் மரமுந்திரிகைத் தோட்டம் யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஜெயபுரம் வடக்கு பிரதேசத்தில் உள்ள குடிமனைகளுக்குள் புகுந்து பயன்தரும் மரங்களையும் யானைகள் அழித்து வருகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பூநகரியில் இருந்து பல்லவராயன்கட்டு சந்திக்கிடையில் மாலை வேளைகளில் யானைகள் வீதிக்கு வருவதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் பெரும் அச்சத்துடன் பயணிக்கின்றனர்.

எனவே யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-ரி1)



## கிராம அலுவலர்களின் இடமாற்றங்களில் பிரதேச சபை உறுப்பினர்கள் தலையீடு

### புதுக்குடியிருப்பு கிராம அலுவலர்கள் கவலை

முல்லைத்தீவு, ஜன.21

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம அலுவலர்கள் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்களின் கடமைகளிலும், அவர்களின் இடமாற்றங்கள் தொடர்பிலும் தேவையற்ற விதத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் தலையிட்டு வருகின்றனர் என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம அலுவலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பலர் தமது மக்கள் சேவையை சிறந்த முறையில் மேற்கொண்டு வரும் அதே வேளை, குறித்த பிரதேச சபையைச் சேர்ந்த ஒரு சில உறுப்பினர்கள் தனிப்பட்ட நோக்கங்களுக்காக தங்கள் கடமைப்பரப்புக்கு அப்பாற்பட்ட வகையில் கிராம அலுவலர்களின் இடமாற்றங்கள் தொடர்பிலும், கிராம அலுவலர்களின் கடமைகளிலும் தேவையற்ற விதத்தில் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர். இவ்வாறான தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு இவ்வாறான நிலை தொடருமாயின் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளோம் - என்றனர். (ப)




கொரோனாத் தொற்று அபாயத்துக்கு மத்தியிலும் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மாணவர்களின் பாதுகாப்புக் கருதி, காலி யக்கமுல்ல மாகெதர ஆரம்பப் பாடசாலையின் வகுப்பறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. (க)

## பிரேத்தியேக வகுப்புக்களை மீள ஆரம்பிக்க விழிப்புணர்வு அவசியம்

கொழும்பு, ஜன.21

பிரத்தியேக வகுப்புகளை மீண்டும் ஆரம்பிக்க அனுமதி வழங்குவதில் குறைந்தபட்ச மாணவர்களின் எண்ணிக்கை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிக முக்கியம் என அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

பிரத்தியேக வகுப்புகளை இம்மாதம் 25 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்க அனுமதிக்கப்படும். சுகாதார வழிகாட்டுதல்கள் முறையாகப் பின்பற்றப்படாவிட்டால் பிரத்தியேக வகுப்புகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் சிக்கல் நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என குறித்த சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (ரி5)

## சீனி இறக்குமதியில் வரி மோசடியில்லை

### மறுக்கிறார் லசந்த

**கொழும்பு,ஜன.21**

**சீனி இறக்குமதியில் 10 பில்லியன் ரூபா வரி மோசடி இடம் பெற்றிருக்கவில்லை என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.**

தனியார் நிறுவனமொன்றுக்கு சீனி இறக்குமதிக்காக வரிச்சலுகை வழங்கப்பட்டதன் ஊடாக, வரி மோசடி இடம்பெற்றுள்ளது என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் நாடாளுமன்றில், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் கேள்வியெழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, அவ்வாறான வரி மோசடிகள் இடம்பெறவில்லை. அது தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பேன். நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் இந்தக் குற்றச்சாட்டு குறித்து ஆராயப்பட்டது. அதில் வரிமோசடி இடம் பெற்றமை குறித்து எதுவித தகவலும் பதிவாகவில்லை- என்றார். (க-இ)

## உயர் நீதிமன்றுக்குள் நால்வருக்கு கொரோனா

கொழும்பு, ஜன.21

உயர்நீதிமன்ற வளாகத்தில் 4 ஊழியர்களுக்கு, கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என்று தலைமை நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடத்தப்பட்ட பி.சி.ஆர் சோதனைகளில், நான்கு ஊழியர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. (க-இ)

## மாவட்டச் செயலகத்தில் ஒருவருக்கு கொரோனா

மட்டக்களப்பு, ஜன.21

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் காணி பதிவகத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் காணிப் பதிவகத்தின் செயற்பாடுகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

காணிப் பதிவகத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர், கடமைக்காக வந்த வேளை, வீதி விபத்தில் சிக்கி களுவாஞ்சிக்குடி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (க-இ)

## மரபணு மாறிய புதிய கொரோனாத் தொற்று

### பரிசோதிக்க விசேட மருத்துவ குழு

கொழும்பு, ஜன. 21

சைப்ரஸ் நாட்டிலிருந்து கடந்த வாரம் அழைத்து வரப்பட்ட வெளிநாட்டு பணியாளர்கள் 45 பேருக்கு மரபணுக்கள் மாறிய கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதா என பரிசோதிப்பதற்கு விசேட மருத்துவ குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்த வெளிநாட்டு பணியாளர்களை தனிமைப்படுத்துவதற்கு முழுமையான பணியை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இவ்வாறு வந்த பணியாளர்கள் மூலம் சமூகத்துக்குள் கொரோனாத் தொற்று பரவாத வகையில் பார்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ரி5)

## முதலீடுகளை முடக்க எதிர்க்கட்சியினர் சதி

### குற்றஞ்சாட்டுகிறார் செஹான்

கொழும்பு,ஜன.21



வர்த்தகர்கள் அரசு மீது கொண்டுள்ள நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இந்தச் சூழலில் முதலீடுகள் தொடர்பான பேச்சுக்களும் இடம்பெறுகின்றன. எதிர்க்கட்சியினர் அதனை முடக்குவதற்கு முயற்சிக்கின்றனர் என்று சமுர்த்தி, மனை பொருளாதார நுண்நிதி, சுயதொழில் வாய்ப்பு மற்றும் வர்த்தக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள், உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்படாமை தொர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர திசாநாயக்காவால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அதற்குப் பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்தார். (க-இ)

## மாத்திரைகளுடன் இரு நபர்கள் கைது

கொழும்பு, ஜன.21

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கொதலாவலபுர பகுதியில் 1000 போதை மாத்திரைகளுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரத்மலான பகுதியை சேர்ந்த 26 வயதுடையவர்களே இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கல்கிஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி5)



## புலம்பெயர் பணியாளர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவர வலியுறுத்து

கொழும்பு, ஜன.21

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை நாட்டுக்கு மீண்டும் அழைத்து வருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி முற்போக்கு பெண்கள் ஒன்றியத்தால் கொழும்பிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் 'நாட்டின் பாரத்தைச் சுமக்கும் புலம்பெயர் பணியாளர்களைக் கைவிடாதிருப்போம்' மற்றும் 'வெளிநாடுகளில் பணிபுரியும் ஊழியர்கள் சுரண்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும்' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர். இதில் முற்போக்கு பெண்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் உறவினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ரி5)

# மன்னாரில் கொரோனா தாண்டவம்; நகருக்குள் வருவதைத் தவிருங்கள்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

**மன்னார், ஜன.21**

**மன்னார் நகருக்குள் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்துள்ளதால் அத்தியாவசிய தேவையின்றி நகருக்குள் வருவதைத் தவிருங்கள் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் கேட்டுக்கொண்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கோரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணியாளர்கள் என பலருக்கு கடந்த வாரம் பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனைகளில் மன்னார் நகரப் பகுதி மற்றும் பஸார் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் அதிகளவானோருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இதுவரை பிரதான கடைத் தொகுதிகளில் சுமார் 15 வர்த்தக நிலையங்கள் சுகாதார அதிகாரிகளால் பூட்டப்பட்டுள்ளன. வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் சிலர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதே நேரம் அத்தியாவசிய தேவைகள் இன்றி நகரப் பகுதிக்குள் வருவதையோ அல்லது கூட்டம் கூடுவதையோ பொதுமக்கள் தவிர்க்கவேண்டும் - என்றார். (ப-56)

## பொருண்மியம் நலிந்த நோயாளர்களுக்கு உதவி



முல்லைத்தீவு, ஜன.21

முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களில் பொருண்மியம் நலிந்த நோயாளர்கள் மற்றும் இரண்டு கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. தாய்த் தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் பிரான்சில் வசித்து வரும் சி.கெங்காதரனின் 60 ஆவது பிறந்த நாளில் அவரின் நிதிப்பங்களிப்பில் தாய்த்தமிழ் பேரவை யின் ஆலோசகர் மருத்துவ கலாநிதி சுதர்சனின் அனுசரணையில் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ப- 222)

## சாவகச்சேரியில் வெளிமாவட்ட நபர்கள் தங்கியிருப்பின் உடனே அறியத்தருக

*சுகாதார மருத்துவ அதிகாரிபணிமனை அறிவித்தல்*

கொடிகாமம், ஜன. 21

கொவிட்-19 நோய்ப் பரம்பல் அதிகமுள்ள வவுனியா, மன்னார் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் இருந்து எவரேனும் வந்து எமது பிரதேசத்தில் தங்கியிருப்பின், அது தொடர்பில்அறியத்தாருங்கள் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது;

அவ்வாறு வந்திருக்கும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களை பின்வரும் இடங்களுக்கு அழைத்துச் சென்று பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்வதன் ஊடாக சமூகத்தில் ஏற்படக்கூடிய தேவையற்ற சந்தேகங்களைக் களைந்துகொள்ள முடியும்.

உங்கள் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் ஊடாக முன்பதிவு செய்து வாரத்தின் அனைத்து நாள்களிலும் காலை 8 மணிக்கு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவிலும், எழுதுமட்டுவாழ் சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் சோதனைச்சாவடியில் திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி, சனி ஆகிய நாள்களிலும் நாவற்குழி சந்தியில் வியாழன் மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களிலும் காலை 4.30 மணி முதல் காலை 7மணிவரையில் உங்களை பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ளமுடியும். இச்சேவை முற்றிலும் இலவசமானது என்றனர். (ப-159)



## முகாமையாளர்களுக்கான கௌரவிப்பும்,வரவேற்பும்

கொழும்பு,ஜன.21

இடமாற்றம் பெற்றுச் செல்லும் மயிலிட்டித் துறை, மீன்பிடித் துறைமுக முகாமையாளருக்கான கௌரவிப்பும், புதிய முகாமையாளருக்கான வரவேற்பு நிகழ்வும் மயிலிட்டி துறைமுக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

மயிலிட்டித்துறை மீன்பிடித் துறைமுகத்தின் முகாமையாளராகச் செயற்பட்டு வந்த திச வீரசிங்கம் சிவரூபன் திருகோணமலை மீன்பிடித் துறைமுகத்துக்கும், திருகோணமலை மீன்பிடித் துறைமுகத்தில் முகாமையாளராகக் கடமையாற்றிவந்த முருகமூர்த்தி திருக்குமரன் மயிலிட்டித்துறை மீன்பிடித் துறைமுகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நிகழ்வில், மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தால் அமைக்கப்பட்டிருந்த மீன் விற்பனை நிலையம் திறக்கப்பட்டது.

அத்துடன் இரு முகாமையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

## நட்புக்கு வைத்த ஆப்பு

கிளிநொச்சி, ஜன.21

நண்பனாகப் பழகி வந்த ஒருவர், தனது நண்பனின் வீட்டிலேயே, பணம், நகைகளைத் திருடிச் சென்ற சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி - பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

முகமாலைப் பகுதியில் உள்ள தனது நண்பனின் வீட்டுக்கு வந்த குறித்த நபர், வீட்டில் அனைவரும் இருக்கும் நிலையில், சூட்சுமமாக இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. வீட்டிலிருந்த தாலிக்கொடி மற்றும் இந்திய ரூபா, நகைகள் என்பவற்றை அவர் திருடிச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

வீட்டின் அறையில், பொருள்கள் கலைந்திருப்பதை அவதானித்த வீட்டின் உரிமையாளர், பணம் மற்றும் நகைளைத் தேடியபோதே குறித்த நபரால் அவை திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் விசாரணைளை முன்னெடுத்தனர். யாழ்ப்பாணத்தில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணரட்ன தெரிவித்தார். (ப-113)

## கோழிகளை ஏற்றி வந்த வான் தள்ளாடியில் விபத்து

வவுனியா.ஜன.21



வவுனியாவிலிருந்து மன்னாருக்கு வியாபாரத்துக்காக கோழிகளை ஏற்றிவந்த வான் ஒன்று தள்ளாடிச் சந்தியில் விபத்துக் குள்ளானது. நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.மன்னார் பகுதியில் வியாபாரத்தை முடித்துக் கொண்டு வவுனியா திரும்பிய வேளையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வான் விபத்துக்குள்ளானது.

வாகனச் சாரதி மற்றும் நடத்துநர்கள் தெய்வாதீனமாக சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். வாகனம் பலத்த சேதமடைந்துள்ளது. விபத்து தொடர்பில் மன்னார் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-213)

## ஒட்டுசுட்டானில் காணி பயன்பாட்டு குழுக்கூட்டம்

*ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு*

முல்லைத்தீவு, ஜன.21

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தால் மக்களின் காணிப்பிணக்குகளை தீர்ப்பது தொடர்பாக பிரதேச செயலாளர் தலைமையிலான கூட்டம் ஒன்று கிராம மட்ட அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பிரசன்னத்துடன் நடைபெற்றுள்ளது. அந்தக் கூட்டத்தில் செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மக்கள், மீள்குடியேற்றப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், இன்னமும் பலரின் காணிப் பிணக்குகள் தீர்த்து வைக்கப்படவில்லை. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் பலர், மனித உரிமை ஆணைக் குழுவரை சென்று முறைப்பாடு செய்தும் எதுவித நடவடிக்கையும் நடைபெறவில்லை. இந்த நிலையில் நேற்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் காணிப் பிணக்குக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனினும் காணொலி எடுக்கமுடியாது என்றும், தகவல் திரட்டில் ஈடுபடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் வாசலில் தனது சொந்தக் காணியை மீட்டுத்தரக் கோரி காணி உரிமையாளர் ஒருவர் கவனவீர்ப்பு நடவடிக்கையையும் முன்னெடுத்தார். (ப-19)

# பொறுப்பை மறந்து பயணிக்கும் கோத்தா



## சபையில் அநுர சாட்டையடி

**கொழும்பு,ஜன.21**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கமும், அமைச்சர்களும் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றனர் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"இலங்கையில் பாரம்பரிய ஆயுள்வேத மருத்துவ முறைமை இருக்கின்றது. அத்துறையில் தேர்ச்சிபெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த ஆயுள்வேத வைத்தியர்கள் இருக்கின்றனர். இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களை தம்மால் குணப்படுத்த முடியும் என்று பதிவுசெய்யப்பட்ட ஆயுள்வேத மருத்துவர்கள் தெரிவித்தனர். எனினும், அவர்களது கோரிக்கையை அரசு ஏற்கவில்லை.

மேற்கத்தேய மருத்துவம்தான் இதற்கு சரி என்ற நிலைப்பாட்டில் அரசு இருந்தது. ஆனால் ஆருடம்கூறும் ஒருவர் திடீரென பாணியொன்றைத் தயாரித்தார். அதனை ஆட்சியாளர்கள் தூக்கிப்பிடித்தனர். சுகாதார அமைச்சர் கூட அந்த பாணி யைப் பகிரங்கமாக பருகினார். இது தவறான அணுகுமுறையாகும். எவராவது மருந்து கண்டுபிடித்திருந்தால் அதனை ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பி அறிக்கை கோரியிருக்க வேண்டும். அதனை விடுத்து சுவை பார்த்து 'சுப்பர்' என விழிகளில் சைகை காட்டுவது சுகாதார அமைச்சருக்கு பொருத்தமான நடவடிக்கையாக அமையாது.

பொறுப்புடன் செயற்படவேண்டிய சுகாதார அமைச்சர் இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவது வேதனைக்குரிய விடயமாகும். இறுதியில் கொரோனா பாணி அருந்திய இராஜாங்க அமைச்சருக்கும் கொரோனா தொற்றியுள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது. அந்த உறுதிமொழியும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆக இந்த அரசாங்கமும், அமைச்சர்களும் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றனர்." என்றார். (ஐ-44)

---

# தம்மிகவின் பாணியை அரசு ஊக்குவிக்கவில்லை

## கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

கொழும்பு.ஜன.21

தம்மிகவின் பாணியை அரசாங்கம் ஊக்குவிக்கவில்லை என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'தம்மிகவின் பாணி தொடர்பில் கடந்த காலங்களில் அதிகம் பேசப்பட்டது. மருத்துவ ரீதியான பரிசோதனைக்காக 2 வாரங்கள் அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில், இதுவரை அரசாங்கம் அது தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் முன்வைக்கவில்லை.

கொரோனா வைரஸ் தடுப்பூசி தொடர்பிலும் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டவர்களில் சிலர் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி உள்ளனர். இந்நிலையில் பார்த்தால் தம்மிகவின் பாணி சிறந்தது. இந்தப் பாணி தொடர்பில் மேலும் பல தகவல்களைத் தேடவேண்டும். அரசாங்கம் இதை ஊக்குவிக்கின்றது என நான் நினைக்க வில்லை. எது எவ்வாறாயினும், அரசாங்கம் இதைப் பயன்படுத்துமாறு இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.' என்றார். (ஐ-இ)

---

# ரஞ்சனை விடுக்கும் வரை கறுப்புப் பட்டி அணிவேன்

## ஹரின் பெர்னாண்டோ எம்.பி சபதம்



கொழும்பு, ஜன.21

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி கிடைக்கும்வரை நாடாளுமன்றில் கறுப்புப் பட்டியை அணிவேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; நான் நீதிமன்றத்தையும் நீதிபதிகளையும் விமர்சிக்கவில்லை. மாறாக எனது நண்பனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காகவே குரல் கொடுக்கின்றேன்- என்றார். (ப)

---

# இலவசக்கல்வி மேம்படுத்தப்படும்

## மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு.ஜன.21

கொவிட்19 வைரஸ் தாக்கத்தால் மாணவர்களின் கற்றலுக்குப் பாதிப்பை ஏற்படுத்த இடமளிக்க முடியாது. அடிப்படை வசதிகளற்ற பாடசாலைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலவசக் கல்வியை மேம்படுத்த அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டில் உள்ள பாடசாலைகள் அனைத்தையும் தரமுயர்த்துவது அரசின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. ஆட்சியில் இருந்த காலத்தில் கல்வித்துறையை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். பாடசாலைகளில் சுகாதாரப் பாதுகாப்பு தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பிள்ளைகளைப் பாதுகாப்பான முறையில் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உண்டு. கொவிட்19 வைரஸ் தாக்கத்தால் மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்க இடமளிக்க முடியாது-என்றார். (க-இ)

---

# விவசாய மக்களை கூலிகள் ஆக்காதீர்!

## விவசாய போராட்ட ஒருங்கிணைப்பாளர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 21

விவசாயிகளை நிறுவனங்களுக்கு இரையாக்கும் வகையில் இந்திய அரசால் தயாரிக்கப்பட்ட புதிய சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது விவசாயப் போராட்ட இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கருத்து தெரிவிக்கையில்,

விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய சட்டமூலத்துக்கு எதிராக இந்திய விவசாயிகள் வீதியில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நாமும் இதனை வலியுறுத்தியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

ஒரு நாட்டின் உணவுப் பொருள்கள் உற்பத்தியில் 70 சதவீதமான உற்பத்திகள் விவசாயிகளாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் தற்போது சில நிறுவனங்கள் விவசாயிகளை நெருக்கடிக்குள் தள்ளி உணவு உற்பத்திகளை கைகப்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றன. எனவே விவசாயிகளை நிறுவனங்களின் கூலிகளாக்க முயற்சிக்க வேண்டாம் என்று இந்திய அரசிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (ரி5)

---

# வைரஸ் தொற்றை இனங்காணும் பரிசோதனை நிலையம் ஸ்தாபிப்பு

கொழும்பு, ஜன. 21

விஞ்ஞானத் தொழிநுட்பத்தை உள்ளடக்கி கொவிட்19 வைரஸ் தொற்றை கண்டறியும் பி.சி.ஆர் பரிசோதனை நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகூடத்துக்கு பி.சி.ஆர் பரிசோதனைக்கான அனுமதி முதல் தடவையாக கிடைக்கப்பெற்றுள்ளது என கிரீன்ஸ் ஜெனொமிக்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது, கொவிட் 19 வைரஸ் தொற்றால் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு மருத்துவர் பரணவிதாரன வின் தலைமைத்துவத்தின் கீழ் சுகாதார தரப்பினர், சுகாதார நலன் வல்லுநர்கள், மற்றும் தரவு முறைமைகள், நடைமுறைகள் என்பவற்றுடன் இந்த நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

உயர் செயற்பாடு, வினைத்திறனான மற்றும் துரிதமான சேவையை வழங்கும், மருத்துவ மரபணு ஆய்வுகூடமாக கொவிட்-19 வைரஸை கண்டறியும் நிலையமாக இது காணப்படுகிறது.

கிரீன்ஸ் மரபணு சேவையானது, உயர்தர பரிசோதனை சேவைகளையும், உற்பத்திகளையும், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மரபணு பரிசோதனை சந்தையில் ஏற்றுமதி செய்ய உதவும் எனத் தெரிவித்தார். (ரி5)

## திருடியதோ 1 தேங்காய் பிணையோ 1 லட்சம்!

கொழும்பு, ஜன.21
மல்வத்து ஹரிப்பிட்டி பகுதியிலுள்ள தென்னம் தோட்டத்துக்குள் அத்துமீறி நுழைந்து, 120 ரூபா பெறுமதியான தேங்காயொன்றைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் கம்பஹா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவரை ஒரு லட்ச ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க கம்பஹா நீதிவான் மஞ்சுல கருணாரத்ன உத்தரவிட்டுள்ளார். அத்துடன் எதிர்வரும் மார்ச் 18ஆம் திகதி மீண்டும் சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)

# உண்மை நிலவரத்தை மறைக்கும் அமைச்சு

### பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கம் பாய்ச்சல்



**கொழும்பு, ஜன.21**
**கொரோனா வைரஸ் நிலவரம் தொடர்பில் சுகாதார அமைச்சு போலியான கருத்தை உருவாக்குகின்றது என பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. எதிர்வரும் வாரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை பலமடங்காக அதிகரிக்கலாம் எனவும் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
பண்டிகைக் காலத்தில் பொதுமக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துமாறும் மிகவும் ஆபத்தான பகுதிகளை முடக்குமாறும் நாங்கள் விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் செவிமடுக்கவில்லை. தற்போது நிலைமை கையைமீறிப் போய்விட்டது.
மக்களே இதற்கான விலையைச் செலுத்த வேண்டியுள்ளது. மக்கள் தங்களின் பாதுகாப்பை தாங்களே உறுதி செய்வதை தவிர வேறு வழியில்லை. கடந்த வருட இறுதியில் மேல்மாகாணத்தில் மாத்திரம் காணப்பட்ட கொரோனா பரவல், தற்போது திருகோணமலை, மட்டக்களப்பு, காலி, மாத்தறை, அனுராதபுரம் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவியுள்ளது.
இது இலங்கை சமூகத்தொற்று அளவை அடைந்துள்ளது என்பதற்கான அறிகுறி.
சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் கொரோனா தொடர்பான போலியான தோற்றத்தை அரசியல்வாதிகளுக்கு உருவாக்கியுள்ளதால், உரிய முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.
தாம் தமது பதவிகளை இழக்கலாம் என்ற அச்சத்தால் இவர்கள் இவ்வாறு பொய்யான தகவல்களை வழங்கியுள்ளனர் - என்றார். (வ-இ)

## காணொலி மூலம் வழக்கு விசாரணை

கொழும்பு, ஜன.21
மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் காணொலி மூலம் வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளன.
வெலிக்கடை மற்றும் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளில் இருந்தே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என நீதி அமைச்சு அறிவித்துள்ளது.
இதனிடையே கைதிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் சிறைச்சாலைகள் மற்றும் கைதிகளின் புனர்வாழ்வு அமைச்சர் லொஹான் ரத்வத்த ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இராஜாங்க அமைச்சரின் சாரதிக்கு கொரோனா

கொழும்பு, ஜன.21
இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவின் சாரதிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கேகாலை பொது மருத்துவமனையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
அத்துடன் இராஜாங்க அமைச்சரின் மகன்மார், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் செயலாளருக்கு கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனினும் அமைச்சருடன் நெருங்கிப் பழகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 22 பேர் தம்மை சுய தனிமைப் படுத்திக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

# விமான நிலையங்கள் முழுமையாகத் திறப்பு



### சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.21
விமான நிலையங்கள் இன்று வியாழக்கிழமை முதல் மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்படவுள்ளன என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த வருடம் மார்ச் மாதம் 19 ஆம் திகதி சுற்றுலா பயணிகளின் வருகைக்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டது.
எனினும் முதற்கட்டமாக அண்மைய சில நாள்களாக உக்ரைனில் இருந்து சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்தனர் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இந்த நிலையில் இன்று முதல் சுற்றுலாப் பயணிகளுக்கான சட்டத்திட்டங்கள் தளர்த்தப்படவுள்ளன எனவும், நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் சுற்றுலா பயணிகள் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## கொரோனா நோயாளி பிடிபட்டார்



கொழும்பு, ஜன.21
புனாணை சிகிச்சை முகாமில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா நோயாளி தப்பிச்சென்ற நிலையில் எஹலியகொட பகுதியில் பிடிபட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
நாட்டில் கொரோனா மூன்றாம் அலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, இதுவரை 14 கொரோனா நோயாளர்கள் சிகிச்சை நிலையங்களிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கிழக்கு முனையம் தொடர்பில் இந்தியாவை பகைக்க முடியாது

### துறைமுக அபிவிருத்தி அமைச்சர் கருத்து



கொழும்பு, ஜன.21
கொழும்பு துறைமுக கிழக்கு முனையம் விடயத்தில் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள முடியாது என துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில் "இந்தியா எமது அண்டைய நாடு. இந்தியாவை நாம் பகைத்துக்கொள்ள முடியாது. அத்துடன் நாம் மீள் ஏற்றுமதி தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவதோடு வெளிநாட்டு வர்த்தக கொடுக்கல் வாங்கல் மற்றும் சர்வதேச தொடர்புகள் போன்ற விடயங்கள் தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தி வருகிறோம் என்றும் அவர் கூறியுள்ளார். (ச-இ)

## ஜனசெத பெரமுனவின் பெயரை மாற்ற முடிவு

ஜனசெத பெரமுனவின் பெயரை 'ஜன உறுமய' என மாற்றிமைக்க தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்கவிடம் ஜனசெத பெரமுனவின் தலைவர் வண.பட்டரமுல்ல சீலரத்ன தேரர் அனுமதி கோரியுள்ளார். இதற்கான கோரிக்கைக் கடிதம் நேற்று தேர்தல் ஆணைக்குழுவில் ஒப்படைக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானத்தின் அடிப்படையில் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் அனைத்து மாகாணங்களுக்கும் வேட்பாளர்களை நிறுத்தி போட்டியிட வண.சீலரத்ன தேரர் எண்ணியுள்ளார். (வ-இ)

## சுற்றிவளைப்பில் சிக்கின பெருமளவு கஞ்சாச் செடிகள்

மொனராகலை, ஜன.21
தனமல்வில பொலிஸார் நலியவனயா பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடத்திய சுற்றிவளைப்பில் நன்கு பயிரிடப்பட்ட நிலையிருந்த மூவாயிரத்துக்கும் அதிகமான கஞ்சாச் செடிகள் கண்டறியப்பட்டன.
அவை 3 அடி உயரத்தில் காணப்பட்டன எனவும் அவற்றின் பெறுமதி 20 லட்சம் ரூபாவுக்கும் அதிகமானது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அனைத்து கஞ்சாச் செடிகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களைக் கைது செய்யும் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (வ-இ)

## இன்றைய நாள்



**மேடம்:** முக்கிய விசேஷங்களை முன்னின்று நடத்தும் பொறுப்பு வரும். நண்பர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு சரியாகி நிம்மதி தரும். சக பணியாளரிடம் கடுமை காட்டாமல் இருப்பது நல்லது.

**இடபம்:** பணி விஷயங்களில் திருப்திகரமான பலன் காண்பீர்கள். திருப்பணிகள் செய்யும் வாய்ப்பு கிடைக்கும். அலைச்சல் கூடும். பெரியோர் ஆசிகள் கிடைக்கும். விருந்து சாப்பிடுவீர்கள்.

**மிதுனம்:** எதிர்பாலினத்து நண்பர்களோடு அளவோடு பழகுவது நல்லது. உல்லாச பயணங்கள் செல்லும் திட்டம் நிறைவேறும். புத்திசாலித்தனமான முதலீடுகள் செய்யும் எண்ணம் வரும்.

**கடகம்:** அலுவலக விஷயங்களில் முழுமையான திருப்தி வராது. பரிசுகள், விருதுகள் உண்டு. பெண்கள் நிம்மதி அடைவீர்கள். நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். பல நாள் குறைகள் தீரும்.

**சிம்மம்:** வீட்டிலும், அலுவலகத்திலும் உங்களின் மதிப்பு, மரியாதை கூடும். நினைவாற்றல் அதிகரிப்பதால் பிரச்னையில் இருந்து வெளிவருவீர்கள்.

**கன்னி:** தெய்வ வழிபாட்டில் நீங்கள் கலந்து கொள்வீர்கள். விருப்பங்கள் நிறைவேறும். போதிய வாய்ப்பைப் பெறுவீர்கள். கஷ்டங்களில் இருந்து விடுபட்டு உற்சாகம் பெறுவீர்கள்.

**துலாம்:** பெண்கள் விருப்பங்கள் நிறைவேற பாடுபட்டு வெல்வீர்கள். அலுவலகம் சம்பந்தமாக பயணம் செல்ல நேரிடலாம். மனதுக்கு பிடித்தவர்களின் வெற்றி மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்** பெண்கள் விருப்பங்கள் நிறைவேற பாடுபட்டு வெல்வீர்கள். அலுவலகம் சம்பந்தமாக பயணம் செல்ல நேரிடலாம். மனதுக்குப் பிடித்தவர்களின் வெற்றி மகிழ்ச்சி தரும்.

**தனுசு** காதல் எண்ணங்கள் தோன்றும். குடும்பம் விரிவாக்கம் பெறும். சிரமங்களில் இருந்து விலகுவீர்கள். உடல் நலம் மேம்படும். உல்லாசமும், உற்சாகமும் பெருகும். நட்பு விரியும்.

**மகரம்** பணியிடத் தொல்லை நீங்குவதால் நிம்மதி கூடும். கவனமாக எதையும் செய்ய வேண்டும் என்று நினைவிருக்கட்டும். வருமானம் வருமளவுக்கு செலவுகளும் வரும்.

**கும்பம்:** அரசு தொடர்பான பணிகளை முடித்து நிம்மதி அடைவீர்கள். வீண் செலவுகளை தவிர்த்து விடுங்கள். உணவில் கவனம் தேவை. பணம் வரும். புதியவர்களிடம் கவனமாக இருங்கள்.

**மீனம்:** குறுக்கு வழியில் சம்பாதிக்க வழிகாட்டுவோரை விலக்குங்கள். தூரத்து உறவினர்கள் தரும் ஆலோசனை ஒன்று உதவும். வெளிநாட்டில் உள்ள பிள்ளைகளிடம் இருந்து ஆறுதல் கிடைக்கும்.

# மத உணர்வுகளை மதிக்க வேண்டும்



## அமெரிக்கா அறிவுரை

கொழும்பு, ஜன.21

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மத உணர்வுகளை மதிக்கவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி டெப்பிளிட்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸால் உயிரிழந்த அனைவரதும் குடும்பத்தினருக்கும் ஆதரவாக அமெரிக்கா உள்ளது.

சர்வதேச சுகாதார வழிகாட்டுதல்களின்படி மதநம்பிக்கைகளை பின்பற்ற அனுமதிப்பதன் மூலம் உரிமையையும் கௌரவத்தையும் மதிக்கவேண்டும். இலங்கை 1955இல் கைச்சாத்திட்ட சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின்படி, அனைவரும் கற்பித்தல், பின்பற்றுதல், வழிபடுதல் போன்றவற்றில் தங்கள் மதநம்பிக்கையை பின்பற்ற உரிமையுள்ளது.

கொவிட் சர்வதேச சவால்களை உருவாக்கியுள்ளது. ஆனால் அதற்காக எங்கள் இரக்க குணத்தையும் நம்பிக்கைகளை மதிப்பதையும் இழக்கும் நிலையேற்படக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

# கூட்டு ஒப்பந்தத்தை நீக்கினால் தொழிலாளர்களுக்கே பாதிப்பு



## கூறுகிறார் ஜீவன் தொண்டமான்

கொழும்பு.ஜன.21

கூட்டு ஒப்பந்தத்தை இரத்துச்செய்தால் அது தொழிலாளர்களுக்கே பாதிப்பாக அமையும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'கம்பனிகளும், தொழிற்சங்கங்களும்தான் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்றன. அரசாங்கத்தால் மூன்றாம் தரப்பாக தலையிடவே முடியும். அந்தவகையில் விரைவில் நல்ல முடிவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். கூட்டு ஒப்பந்தம் அநீதியானது என குறிப்பிட்டு தொழிலாளர்களை சிலர் தூண்டிவிடுகின்றனர். கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களுக்கு நன்மைகளும் உள்ளன. குறிப்பாக வருடம் 300 நாள்கள் வேலை வழங்கப்படவேண்டும் என அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு வழங்கப்படாவிட்டால் கம்பனிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் கூட்டு ஒப்பந்தம் இல்லையேல், தொழில் அமைச்சரிடம்தான் முறையிடவேண்டிவரும். கம்பனிகள் நினைத்தால் 2 நாள்கள் கூட வேலை வழங்கலாம். அவர்களின் முடிவை சவாலுக்குட்படுத்த முடியாது- என்றார். (ஐ-இ)

# பாடவிதானங்களில்; ஆயுள்வேத முறைமையை இணைப்பதற்கு தீர்மானம்

கொழும்பு, ஜன. 21

உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான பாட விதானங்களில் ஆயுள்வேத மருத்துவ முறைகளை இணைத்துக்கொள்வதற்கு பரிந்துரை செய்ய சுதேச மருத்துவ முறைகளின் மேம்பாடு, கிராமிய, ஆயுள்வேத மருத்துவமனைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார அமைச்சு தீர்மானித் துள்ளது.

இதன்படி, ஆயுள்வேத மருத்துவ முறை தொடர்பாக மாணவர்களுக்கு தெளிவூட்டுவதற்காக குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என அமைச்சின் செயலாளர் குமாரி வீரசேகர தெரிவித்தார். மேலும் இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார். (ரி5)



# சுற்றுலாவிகளூடான தொற்றை தடுப்பதற்கு விசேட நடவடிக்கை

கொழும்பு, ஜன.21

சுற்றுலா பயணிகளிடமிருந்து சமூகத்துக்கும் சமூகத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளுக்கும் தொற்று ஏற்படாமல் தடுப்பதற்கான விசேட செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இணையவழியூடாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில், விமான நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. சுற்றுலா விஸா, வதிவிட விஸா உள்ளிட்டவற்றைக் கொண்ட எந்தவொரு நபரும் விமானம் மூலம் நாட்டுக்கு வர முடியும். விமான நிலையம் திறக்கப்பட்டதன் பின்னர் நாளொன்றுக்கு 2500 சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைக்க எதிர்பார்க்கப்படுகிறது.

அவர்களில் எவருக்காவது தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களின் மருத்துவம் போன்றவற்றுக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. சுற்றுலா பயணிகளை அனுமதிக்குமாறு கோரி நாம் எந்தவொரு சுற்றுலா சார் நிறுவனத்துக்கும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை என்றார். (வ-இ)

# ஜனாதிபதி மன்னித்தாலே ரஞ்சன் சிறை மீளலாம்

### டிலான் பெரேரா ஆலோசனை

கொழும்பு, ஜன.21
நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க விடுதலையாவதற்கு ஒரே மாற்று வழி ஜனாதிபதியின் பொதுமன்னிப்பாகும். அதனை பெற்றுக் கொள்ளவே எதிர்க்கட்சி முயற்சிக்கவேண்டும் என ஆளுங்கட்சி உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; ரஞ்சனுக்காக செயற்படுகிறோம் எனத் தெரிவித்துக் கொண்டு அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் போட்டியிடுவதை தடுப்பதற்கே சிலர் முயற்சிக்கின்றனர். ரஞ்சனுக்கு வழங்கப்பட்டிருக்கும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்கான தீர்ப்பு, ஐக்கியத் தேசியக் கட்சி அரச காலத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பாகும். தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் தொடர்பாக ரஞ்சன் உட்பட எதிர்க்கட்சியினருக்கு நல்ல அபிப்பிராயம் இருக்கின்றது. அதனால் நீதிபதிகள் ஒருதலைப்பட்சமாகத் தீர்ப்பு வழங்கினர் என்று தெரிவிக்க முடியாது.

அத்துடன் ரஞ்சனுக்கு தற்போது உயர்நீதிமன்றமே தீர்ப்பளித்து சிறைத்தண்டனை வழங்கி இருக்கின்றது. நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலத்துக்குப் பின்னரே அவர் வெளியில் வரமுடியும். அவ்வாறு இல்லாவிட்டால் இருக்கும் ஒரே மாற்று வழி ஜனாதிபதியின் பொதுமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதாகும்- என்றார். (ப)

# இராணுவ பயிற்சி நாட்டுக்கு ஆபத்து



### எச்சரிக்கிறார் ஹசன் அலி

கொழும்பு, ஜன.21
இராணுவத் தன்மையிலான சிந்தனை நாட்டில் குழப்ப நிலைமையை ஏற்படுத்தும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமுமான ஹசன் அலி எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

18 வயதுக்கு மேற்பட்ட இளையோருக்கு இராணுவப் பயிற்சி என்று முன்வைக்கப்பட்டுள்ள யோசனை மிகவும் ஆபத்தானது. இதனால் நாடு குழப்ப நிலைக்கு முகங்கொடுக்கக் கூடும். இராணுவப் பயிற்சி மூலம் சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்க முடியும் என்று கூறுகிறார்கள்.

ஆனால் இராணுவப் பயிற்சியை நிறைவு செய்து தற்போது உயர் அதிகாரங்களில் இருப்பவர்கள் பல்வேறு முரண்பாடுகளைக் கொண்டிருப்பதை நாம் அவதானித்துக் கொண்டு தான் இருக்கின்றோம். சாதாரணமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ஆயுதப் பயிற்சியை வழங்குவது நாட்டுக்கு ஆபத்தானது -என்றார். (வ-இ)




# ஆண்டு நிறைவு நிகழ்வு

வவுனியா,ஜன.21
வவுனியாவை மையமாகக் கொண்டு சமூக,வாழ்வாதார, கல்விப் பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழ் விருட்சம் அமைப்பின் எட்டாம் ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வவுனியா சூசைப்பிள்ளையார் குளத்தில் அமைந்துள்ள தமிழ் விருட்சம் அமைப்பின் காரியாலத்தில் அதன் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது சமூக ஆர்வலர்கள், மதகுருமார்கள், பொது அமைப்பினர் கலந்துகொண்டனர். (ஐ-110)



# கழிவுப்பொருளில் மின்சாரம் உற்பத்தி

கொழும்பு,ஜன.21
உள்ளூராட்சி நிறுவனங்களினூடாக தினந்தோறும் சேகரிக்கப்படும், எரிக்கக் கூடிய கழிவுப்பொருள்களைப் பயன்படுத்தி, மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் பணிப்பாளர் நளின் மானப்பெரும தெரிவித்துள்ளதாவது,

கொழும்பு மாநகர சபை நாளாந்தம் சுமார் 450 தொன் கழிவுப்பொருள்களைச் சேகரிக்கின்றது.

கரந்தியான குப்பை மேட்டுக்கு எடுத்து வரப்படும் கழிவுப்பொருள்களைப் பயன்படுத்தி இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு 700 தொன் கழிவுப் பொருள்களைப் பயன்டுத்தி 10 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். அதனை தேசிய மின்சார வலைப்பின்னலுடன் ஒன்றிணைக்க முடியும்.

இந்தத் திட்டத்துக்கு கொழும்பு மாநகர சபையால் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்கள் போதுமானதாக இல்லை. மொரட்டுவ, தெஹிவளை, கல்கிசை, கோட்டை, ஹோமாகம, மஹரகம மற்றும் பொரலஸ்கமுவ போன்ற உள்ளூராட்சி நிறுவனங்களின் குப்பைகளையும் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (க-இ)

ஈஸ்டர் தாக்குதல்

# ஆணைக்குழுவின் அறிக்கை இம்மாத இறுதியில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜன.21
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் 31ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் இரண்டு சாட்சியாளர்களிடம் முன்னெடுக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து இந்த விசாரணைகள் நிறைவடைந்தன. இந்த நிலையிலே இறுதி அறிக்கையை எதிர்வரும் 31ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் பதவிக் காலம் ஜனவரி 21ஆம் திகதி நிறைவடைந்த நிலையில் வர்த்தமானி மூலம் அதன் பதவிக் காலம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சர்வதேச ஒத்துழைப்புக்கு விசேட அலகு

கொழும்பு, ஜன.21
வெளிவிவகார அமைச்சின் கீழ் சர்வதேச ஒத்துழைப்புக்கான விசேட அலகொன்றை நிறுவ வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஆசியாவை மையமாகக் கொண்டு வளர்ந்து வரும் பொருளாதாரப் பின்னணிக்கு ஏற்ப உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் சூழல் மாற்றமடைந்து வருகிறது. இதைக் கருத்திற்கொண்டு வலுவான பொருளாதார இராஜதந்திர அணுகுமுறைகளைப் பெற்றுக்கொள்ளவும், அனைத்து முக்கியமான நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், பொருளாதார இராஜதந்திர விடயங்களுக்கு ஏற்புடைய கொள்கை வகுப்புக்களுக்காகவும் இந்த அலகு நிறுவப்படவுள்ளது.

அதற்கமைய குறித்த துறைகளைச் சார்ந்த நிபுணத்துவர்கள் இந்த அலகில் உள்வாங்கப்படவுள்ளனர். (வ-இ)



# மேய்ச்சல் தரவை அபகரிப்பு: பண்ணையாளர்கள் போராட்டம்

மட்டக்களப்பு,ஜன.21
மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரையை பெரும்பான்மை மக்கள் அத்துமீறிப் பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பண்ணையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் பட்டிப்பளை பிரதேசத்தில் இருந்து பிரதேச செயலகம்வரை பேரணியாகச் சென்று, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கச்சக்கொடி சுவாமிமலை 135 கிராம அலுவலர் பிரிவிலுள்ள பரிபாலன திணைக்களத்துக்குச் சொந்தமான மணல் ஏற்றம், காத்தாடியார்சேனை, பொன்னாங்கண்ணிச்சேனை, பனையடிவெட்டை, மலையடி வெட்டிவிச்சுக் குளம் ஆகிய பிரதேச மேய்ச்சல் தரையைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையாக தமது கால்நடை களுக்கான மேய்ச்சல் தரையாக பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தி வருகின்றனர். அந்த மேய்ச்சல் தரையே பெரும்பான்மை மக்களால் அத்துமீறிப் பிடிக்கப்பட்டு, பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இது தொடர்பான மனு ஒன்றும் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ப)









## அமெரிக்க ஜனாதிபதியாக

# பதவியேற்றார் ஜோ பைடன்!

வொஷிங்டன், ஜன. 21

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் நேற்றுப் பதவியேற்றார். துணை அதிபராக கமலா ஹரிஸ் பதவியேற்றார். இலங்கை நேரப்படி நேற்று இரவு 10 மணியளவில் இந்தப் பதவியேற்பு இடம்பெற்றது. பிரபலங்களின் பங்கேற்புடன் கோலாகலமான முறையில் அது இடம்பெற்றது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்றது. ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜோ பைடனும், குடியரசுக் கட்சியின் சார்பில் டொனால்ட் ட்ரம்பும் போட்டியிட்டனர். ட்ரம்பை வீழ்த்தி பைடன் வெற்றிபெற்றார். இதையடுத்து அவர் நேற்றுப் பதவியேற்றார். பைடனுடன் துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஸும் பதவியேற்றார்.

**கலந்துகொள்ளாத ட்ரம்ப்**

புதிதாகப் பதவியேற்கும் ஜனாதிபதிக்கு முன்னாள் ஜனாதிபதி வாழ்த்துக்கூறி ஒரே மேடையில் தோன்றி தன் பணியை ஒப்படைப்பதுதான் அமெரிக்க மரபு. ஆனால் பைடனின் நேற்றைய பதவியேற்பில் ட்ரம்ப் கலந்துகொள்ளவில்லை. பதவியேற்பு இடம்பெறுவதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னதாக அவர் வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறினார். ட்ரம்ப் கலந்து கொள்ளாத நிலையில் குடியரசுக் கட்சியின் இரண்டாம் நிலைப் பிரமுகரும் முன்னாள் துணை ஜனாதிபதியுமான மைக் பென்ஸ் நிகழ்வில் பங்கெடுத்தார்.



**பிரபலங்களின் பங்கெடுப்பு**

முன்னாள் ஜனாதிபதிகளான புஷ், ஒபாமா மற்றும் அரசியல் பிரமுகர்களான ஹிலாரி கிளிங்டன் உள்ளிட்டவர்களும் நிகழ்வில் பங்கெடுத்தனர்.

**தங்க ஒலிவாங்கியில்**
**தேசிய கீதம் இசைப்பு**

நிகழ்வில் ஆரம்பத்தில் பிரபல பாடகியொருவரின் பங்கெடுப்புடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தங்கத்திலான ஒலிவாங்கியில் தேசீய கீதம் இசைக்கட்டது. அதைத் தொடர்ந்து இலங்கை நேரப்படி சரியாக இரவு 10.20க்கு பைடன் பதவியேற்றார். (ம)




## பதவியேற்பில் பங்கெடுக்காது பறந்து சென்றார் ட்ரம்ப்

வொஷிங்டன், ஜன. 21

அமெரிக்காவில் கடந்த 4ஆண்டுகால டொனால்ட் ட்ரம்ப் அத்தியாயம் நேற்று முடிவுக்கு வந்தது. பைடனின் பதவியேற்பில் கலந்துகொள்ளாமல் நிகழ்வுக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னதாகவே அவர் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறினார்.

புதிய அதிபர் ஜோ பைடனின் பதவியேற்பு நிகழ்வு நடைபெறுவதற்கு சில மணிநேரங்கள் முன்ன தாக ட்ரம்ப் அவரது துணைவியார் மெலேனியா சகிதம் வெள்ளை மாளிகையை விட்டு அமைதியாகக் கிளம்பினார். அங்கு கூடியிருந்தவர்க ளுக்கு கை அசைத்துப் பிரியாவிடை கூறியவாறு வெளியேறிச் சென்றார்.

ஜோ பைடனின் பதவியேற்பு நிகழ்வை புறக்கணித்து விட்டுப் புறப்பட்ட அவர் புதிய அதிபருக்கான செய்தி ஒன்றை வெள்ளை மாளிகையில் விட்டுச் செல்கிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது. அதே போன்று புதிய முதல் பெண்மணிக்கான வாழ்த்து செய்தி ஒன்றையும் மெலேனியா ட்ரம்ப் அங்கு விட்டுச் சென்றுள்ளார்.

'மரைன் வண்' என்னும் அதிபருக்கான சிறப்பு வான்படைப் பிரிவின் வெள்ளை நிறமான விசேட ஹெலிக்கொப்டர் ஒன்று வெள்ளை மாளிகையில் இருந்து ட்ரம்ப் தம்பதிகளை ஏறிக்கொண்டு பறந்த காட்சிகள் உலகெங்கும் தொலைக் காட்சிகளில் வெளியாகின. பின்னர் அன்றூஸ் கூட்டுப் படைத் தளத்தில் இருந்து அதிபரது கடைசி உத்தியோக பூர்வ விமானப் பயணம் புளோறிடா நோக்கி ஆரம்பித்தது. அங்கு விமானத்தில் ஏறுவதற்கு முன்னர் பிரியாவிடை உரை நிகழ்த்திய அவர், 'வேறு வழிகளில் மீண்டும் திரும்பி இங்கு வருவோம்' என்று குறிப்பிட்டார். (ம)

## ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை பதவியேற்பு அரங்கில் கிருமிநீக்கம்

வொஷிங்டன், ஜன. 21

அமெரிக்க அதிபராக பைடன் பதவியேற்கும் நேற்றைய நிகழ்வில் உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. குறிப்பாக கொரோனாப் பெருந்தொற்றுக்கு பிரமுகர்கள் உட்படாது இருக்க வேண்டும் என்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

ஒவ்வொருவரினதும் உரையின் பின்னரும் ஒலிவாங்கிகள், உரையரங்குகள் என்பன கிருமி நீக்கம் செய்யப்பட்டன.

நிகழ்வு ஆரம்பமாக முன்னரும் நிறைவடைந்த பின்னரும் பிரமுகர்களின் உடல் வெப்பநிலையும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. (ம)



# வட்டுவாகல் பாலத்தை சீரமைக்க கோரிக்கை!

முல்லைத்தீவு, ஜன.21

நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாது காணப்படும் வட்டுவாகல் பாலத்தை விரைந்து சீரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது; முல்லைத்தீவு - பரந்தன் முதன்மை வீதியில் உள்ள வட்டுவாகல் பாலம், நீண்டகாலமாக சீரமைப்பு இன்றி இருப்பதால் அதனூடாகப் போக்குவரத்து செய்வதில் மக்கள் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர். குறித்த பாலத்தின் ஊடாக நேற்றுமுன்தினம் பயணித்த வாகனம் ஒன்று இடைநடுவில் பழுதடைந்துள்ளது. இதனால் இந்த வீதி ஊடான போக்குவரத்து சுமார் ஒரு மணிநேரம் தடைப்பட்டது. நீண்ட காலமாக சீரமைக்கப்படாததால் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன. குறித்த பாலத்தை விரைவில் சீரமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ஐ-19)



விபத்தில் சேதமடைந்த சங்குப்பிட்டிப் பாலத்தின் கரையோரத்திலிருக்கும், பாதுகாப்பு இரும்புவேலி இதுவரை சீரமைக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த வருடம் ஜூலை மாதத்தில் டிப்பர் வாகனம் ஒன்றும், முச்சக்கர வண்டி ஒன்றும் விபத்துக்குள்ளான நிலையில் குறித்த பாதுகாப்பு வேலி சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-ரி1)

# விதிமுறை மீறிச் சாரத்தியம்; நால்வருக்கு ரூ.107,500 தண்டம்

சாவகச்சேரி ஜன. 21

போக்குவரத்து விதிமுறைகளை மீறி மதுபோதையில் வாகனம் செலுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மதுபோதையிலும், வாகன வரிப் பத்திரம் இன்றியும் வாகனம் செலுத்திய ஒருவருக்கும், மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கும் எதிராக கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டிருந்தன. அந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்போது, மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் அவர்களது சாரதிய அனுமதிப் பத்திரத்தை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் மன்று உத்தரவிட்டது. மதுபோதையிலும் வாகன வரிப் பத்திரம் இன்றியும் வாகனம் செலுத்தியவருக்கு 27 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அவரது சாரதிய அனுமதிப் பத்திரத்தை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் மன்று உத்தரவிட்டது. குறித்த நபரின் தொழிலுக்கு சாரதிய அனுமதிப் பத்திரம் தேவையென சட்டத்தரணி மன்றில் கோரியதையடுத்து மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ப-9)

# காப்பெற் வீதித் திட்டத்தில் ஒட்டுசுட்டான் புறக்கணிப்பு

## புதுக்குடியிருப்பு சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜன.21

அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட நாடு தழுவிய ரீதியில் ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதியை காப்பெற் வீதியாகச் சீரமைக்கும் திட்டத்தில், முல்லைத்தீவின் ஒட்டுசுட்டான் பிரதேசம் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ச.சத்தியசுதர்சன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு கிலோமீற்றர் காப்பெற் வீதி அமைப்பதற்கு 35 மில்லியன் ரூபா நிதி இந்தத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு 196 கிலோமீற்றர், துணுக்காய் பிரதேசத்துக்கு 21 கிலோமீற்றர், மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு 71 கிலோமீற்றர் என மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேசங்களுக்கும் அதிகளவான வீதிகள் தெரிவு செய்யப்பட்டு அவை காப்பெற் வீதிகளாகச் சீரமைக்கப்படவுள்ளன. எனினும் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு வெறும் 5 கிலோமீற்றர் வீதி மாத்திரமே காப்பெற் வீதியாகச் சீரமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அபிவிருத்திசெய்ய வேண்டிய வீதிகள் பல ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காணப்படுகின்றபோதும் அவை இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. இதனை கருத்தில் எடுத்து அரச அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் - என்றார். (ஐ-19)



# சந்தைக்குள் செல்ல விவசாயிகள் மறுப்பு

கிளிநொச்சி, ஜன.21

கொரோனாத் தொற்றை அடுத்து மூடப்பட்டுள்ள சந்தைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில், விசுவமடு சந்தை வியாபாரிகள் சந்தைக் கட்டடத்துக்குள் செல்ல மறுத்து வருகின்றார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் குறித்த சந்தையைத் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்ட போதிலும் வியாபாரிகள் சந்தைக்குள் செல்லாது வீதியின் இரு மருங்கிலும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் வீதியில் துர்நாற்றம், போக்குவரத்து நெரிசல் என்று பல இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (சு-113)

# அம்பனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு

யாழ்ப்பாணம், ஜன. 21

**அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட வாழை மற்றும் பப்பாசி பயிர்ச் செய்கையாளர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த வாழைப் பயிர் செய்கையாளர்கள் 2 ஆயிரத்து 155 பேர்களுக்கு சுமார் 25.5 மில்லியன் ரூபாவும், 47 பப்பாசிப் பயிர் செய்கையாளர்கள் 47 பேருக்கு சுமார் 3 லட்சம் ரூபாவும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

கோப்பாய், ஊரெழு, அச்சுவேலி உட்பட பல்வேறு பிரதேசங்களில் சுமார் 500 ஏக்கர் வரையில் பப்பாசி மற்றும் வாழைத் தோட்டங்கள் அழிவடைந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-20)



மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய திருபாலத்துவ சபை விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை செபமாலை தாசர் சபையின் குரு அருட்பணி ஆண்டனி தலைமையில், திருப்பலியுடன் வெகு சிறப்பாக நடைபெற்றது. (ரி5-159)

# 56 பேருக்கு நேற்று எழுமாறான பி.சி.ஆர்

சாவகச்சேரி ஜன. 21

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் எழுதுமட்டுவாழ் பொலிஸ் சோதனைச் சாவடியில் நேற்று 56 பேருக்கு எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு, அதன் மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் கடந்த மூன்று தினங்களில் 113 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-9)

# மைதானத்துக்கு காணி ஒதுக்கீடு

முல்லைத்தீவு, ஜன.21

கற்சிலைமடு கிராம அலுவலர் பிரிவில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக, 3 ஏக்கர் காணியை பிரதேச செயலகம், பிரதேச சபையிடம் பாரப்படுத்தத் தீர்மானம் எடுத்துள்ளது என்று பிரதேச செயலாளர் த.அகிலன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதேசத்தில் பல்வேறு காணிப் பிணக்குகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

மைதானத்துக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள காணியில் விவசாயி ஒருவர் நீண்டகாலம் விவசாயம் செய்து வருகிறார். குறித்த காணி தனக்குரிய காணி என்று தெரிவித்து அவர் பிரதேச செயலகம் முன்பாக தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். எனினும் அந்தக் காணியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதேச செயலரிடம் கேட்டபோது, விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக அந்தக் காணி பிரதேச சபையிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் காணிக்கு உரிமை கோரிய விவசாயிக்கு மாற்றுக்காணி வழங்கப்படும் - என்றார். (சு-19)

# மலக் கழிவுகளுடன் வீதிகளில் பம்பர்ஸ்

***மூக்கைப் பொத்தி பயணிக்க வேண்டிய நிலை***

சாவகச்சேரி, ஜன. 21

முதியவர்கள் பயன்படுத்தும் பெருமளவான பம்பர்ஸ்கள் வீதியோர வெள்ளத்தினுள் கொட்டப்பட்டுள்ளதால் அவை வீதியில் பயணிக்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகின்றன என்று மாணவர்களும் அரச அலுவலர்களும் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

கைதடிப் பாலத்திலிருந்து தச்சன்தோப்புக்குச் செல்லும் வீதியின் ஓரமாகக் காணப்படும் வெள்ளத்தினுள்ளேயே இவை கொட்டப்பட்டுள்ளன. பம்பர்ஸ்களுடன் மலக்கழிவுகளும் கொட்டப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்கு பிரதேச மக்களுக்கு தச்சன்தோப்பு சந்தி ஊடாக ஏ-9 வீதிக்கு வருவது குறுகிய பாதை என்பதால் யாழ்ப்பாணம், சாவகச்சேரி போன்ற இடங்களுக்குச் செல்லும் மாணவர்கள், அரச அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் இந்தப் பாதையையே பயன்படுத்தி வருகின்றனர். ஆறு மாதங்களுக்கு முன்னர் இவ்வாறு கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு பொதுமக்கள் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து அந்தப் பொருள்கள் பிரதேச சபையால் அந்தப் பகுதியில் புதைக்கப்பட்டன. எனினும் மீண்டும் அந்தப் பொருள்கள் அங்கு கொட்டப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-9)

# முல்லை. குருந்தூர் மலையை சிங்கள மயமாக்க முயற்சி

## கஜேந்திரன் எம்.பி சுட்டிக்காட்டு



**முல்லைத்தீவு, ஜன.21**

**குருந்தூர் மலையை சிங்கள மயமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நில அளவை அத்தியட்சகர் எஸ்.எம்.ஜே.எஸ்.சமரசிங்கவின் செயற்பாடுகள் இனவாத அடிப்படையிலானவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் நாடாளுமன்றில் மேலும் தெரிவித்ததாவது;

குருந்தூர் மலைப்பகுதி தமிழர்களுக்குச் சொந்தமானது. அங்கு தமிழர்கள் மிக நீண்டகாலமாக வழிபாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். கடந்த 2018 ஆம் ஆண்டு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தமிழ் மக்கள் அந்த மலைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தொல்லியல் திணைக்களம் அங்கு சென்று வழிபடுவதற்கு அனுமதி மறுக்கின்றது. அத்துடன் அந்தப் பகுதியை பௌத்த மயமாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொல்லியல் இடமெனக் குறிப்பிடப்பட்ட குருந்தூர் மலைப்பகுதியை எல்லை மீள் நிர்ணயம் செய்த பின்னர் புதிய இடவிளக்க வரைபடம் 4 ஆம் திகதி டிசெம்பர் மாதம் 2020 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு சமரசிங்கவின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் அவரது கடிதம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் குருந்தி விகாரைக்குச் சொந்தமான இடம் எல்லை மீள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதுவொரு இனவாதச் செயற்பாடு. அந்த மலைப் பகுதியை சிங்கள மயமாக்குவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உடனடியாக அந்த வரைபடம் இரத்துச் செய்யப்படல் வேண்டும் என்றும் அதுதொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் கோருகின்றேன் என்றார். (ப)

# காட்டு யானைகள் அட்டகாசம்: பயன்தரு தென்னைகள் அழிவு

## புத்துவெட்டுவானில் சம்பவம்

வவுனியா,ஜன.21

முல்லைத்தீவு மாவட்டத்தின் புத்துவெட்டுவான் கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்கம் காரணமாக விவசாயச் செய்கை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமத்துக்குள் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த யானைகள் பத்துக்கு மேற்பட்ட பயன்தரும் தென்னம்பிள்ளைகளை அழித்து நாசம் செய்துள்ளன.

அத்துடன் பயிரிடப்பட்ட சுமார் 5 ஏக்கர் உழுந்துச் செய்கையும் அழியும் நிலையில் உள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். காட்டு யானைகளை கட்டுப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-ரி1)

# தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பின் ஆரம்பமே குருந்தூர் மலை அபகரிப்பு

## முன்னாள் எம்.பி சிவமோகன் தெரிவிப்பு

வவுனியா,ஜன.21

தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்டமாகவே குருந்தூர் மலை விடயத்தை பார்க்கிறேன் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இதுவொரு தமிழர் பிரதேசம். இங்கு எமது மக்களால் ஐயனார் ஆலயம் பராமரிக்கப்பட்டு அதனை வழிபட்டு வந்தனர் என்பது தான் தமிழர் வரலாறு. இனரீதியாக தமிழர்களுக்கெதிராக உயர்மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கமைவாக பொய்யைக் கூறி தொல்லியல் திணைக்களம் ஆராய்ச்சி என்ற போர்வையில் இங்கு வந்துள்ளது. திட்டமிட்டு தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தால் தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்டமாகவே நான் இதனைப் பார்க்கிறேன். குறித்த செயற்பாட்டின் மூலம் முல்லை மண்ணில் பெரும் ஆக்கிரமிப்பு ஒன்று நடைபெறுகின்றது. இந்த ஆக்கிரமிப்பில் இருந்து நாம் எப்படி பாதுகாப்பாக இருக்கப்போகிறோம் என்பது கேள்விக்குறியான ஒன்றாகவே இருக்கிறது. இந்த மலையில் ஏறி என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்குக் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளிப்படைத்தன்மையாக தொல்பொருள் ஆராய்ச்சிகள் எதுவும் நடக்கவில்லை என்பதற்கு இதுவொரு ஆதாரம் - என்றார். (ப-110)

# ஒட்டுசுட்டான் மருத்துவமனைக்கு மற்றுமொரு மருத்துவரும் தேவை

## பிரதேச மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.21

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனைக்கு மற்றுமொரு மருத்துவரை நியமிக்குமாறு ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது அந்த மருத்துவமனையில் ஒரு மருத்துவரே பணியில் உள்ளார். அவரும் முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் இருந்தே ஒட்டுசுட்டானுக்கு பணிக்கு வந்து பகல் நேரத்தில் குறிப்பிட்ட நேரம் பணியில் ஈடுபடுகிறார்.

இரவு நேரங்களில் ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனை யில் மருத்துவர்கள் பணி யில் இருப்பதில்லை. இதனால் இரவு நேரங்களில் நோயாளர்களை அங்கு கொண்டு செல்வதற்கு மக்கள் தயங்குகின்றனர். இதேநேரம் இங்கு கடந்த மூன்று மாதங்களாக அம்புலன்ஸ் வண்டி சேவையில் இல்லை. இவ் வண்டி திருத்த வேலைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 5ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களின் மருத்துவதேவையை நிறைவு செய்கின்ற ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையில், மருத்துவர் ஒருவர் முழு நேரப் பணியில் ஈடுபடாததன் காரணமாக இன்னொரு மருத்துவரை முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிக்கு நியமிக்க வேண்டும் - என்றனர். (ஐ-ரி2)



*மீசாலை வடக்கு, சுடர் ஒளி முன்பள்ளியின் சிறார்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கற்றல் உபகரணங்களை வழங்கினர். அந்தோனிப்பிள்ளை குயின் மேரி அன்னம்மாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு, அவரின் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் உபகணங்கள் வழங்கப்பட்டன. (க-9)*

# INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security Days | Approximate BOQ of the work (Rs. In (million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1 | Renovation works for JMO Office | 500.00 | 74,000.00 | 91 | 3.66 | C8 |
| 2 | Aluminium & Carpentry works for Laboratory at JICA Building 1st Floor | 500.00 | 29,000.00 | 91 | 1.43 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted andshall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 21.01.2021 up to 03.02.2021 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 am on 05.02.2021, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
21.01.2021.


## கடையுடன் மோதுண்டு விபத்துக்குள்ளான ஹன்ரர்

கிளிநொச்சி, ஜன. 21


யாழ்ப்பாணம்-கண்டிவீதி புத்தூர் சந்திக்கு அருகில் கன்ரர் ரக வாகனமொன்று நேற்று மாலை வீதியைவிட்டு விலகி கடைக் கட்டடத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. அதன் சாரதி காயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்.

(குரி1.159)


**கணினி திருத்தம்**
நடமாடும் சேவை
076 300 5506


## மரண அறிவித்தல்

பிறப்பு 25 • 03 • 1936



இறப்பு 20 • 01 • 2021

### நாகமுத்து அருளம்பலம் (J.P)

**சமாதான நீதவான் (யாழ்மாவட்டம்)**

பூநகரியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து அருளம்பலம் (J.P) சமாதான நீதவான் (யாழ் மாவட்டம்) அவர்கள் நேற்று (20.01.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்வபாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமகள், திருச்செல்வி, திருலோகநாதன், திருச்செந்திநாதன், சிவலோகநாதன், திருப்பதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மார்க்கண்டு, கனகசபை, சுதா, இராஜேஸ்வரி, ஶ்ரீரஞ்சன், கேமறஞ்சினி ஆகியோரின் மாமனாரும், மாலினி, தர்சினி, காலஞ்சென்ற தர்சன், ஆன்கனிலி, விவிஸ்னி, நிரோசா, நிசாந்தன், நிவேதன், நிதுசன், நிருசன், தஜதரன், சுபாங்கன், தினேஸ்குமார் ஆகியோரின் அன்புப் பேரனாரும், அஜிஸ், கிஷாரன் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (21.01.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

071 653 8321

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 20 • 06 • 1957



ஆண்டவன் அடியில் 20 • 01 • 2021

### தம்பிஜயா மோகனதாஸ் (அப்பு)

**(முன்னாள் மகாலட்சுமி லோஞ்சி உரிமையாளர், மதுரா வீடியோ)**

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகட்டுவானைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா மோகனதாஸ் (அப்பு) 20.01. 2021 புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி செல்லம்மா தம்பதியரின் மருமகனும், கமலகுமாரி (கிளி) அவர்களின் ஆருயிர் கணவரும், இந்துகா, அகிதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், குமரன் (கண்ணன்-லண்டன்) இராசேந்திரம் (சின்ராசா-பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜயலட்சுமி (லண்டன்) மற்றும் பாக்கிய லட்சுமி (பரிமளம்-ஜேர்மனி) நாகேஸ்வரி (யாழ்ப்பாணம்) மனோன்மணி (மனோ-கனடா) தெய்வேந்திரம் (கோணேஸ்-சுவிஸ்) ஆகியோரின் அன்பான உடன் பிறப்பும், கௌரிதேவி (ஆத்தா) மனோரமா, நடேஸ்வரன், தற்பரானந்தம், கருணா நிதி (சாயிபோட்டோ) ஶ்ரீமுருகன் (வசந்தன்) மதிவதனி, தர்மகுமாரி (கொழும்பு) ஞானகுமாரி (ஜேர்மனி), சூரியகுமாரி (ஜேர்மனி) வசந்தகுமாரி (கொழும்பு) இராச லட்சுமி (கொழும்பு) காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் தெய் வேந்திரநாதன் அமரர் விஜயகுமார் மற்றும் மகேஸ்வரன், டயலஸ் காந்தன், சிவகுமாரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2021) வியாழக்கிழமை இல.1020 கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பித்து, நண்பகல் 12 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**1020, கே.கே.எஸ் வீதி,**
**நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## பெயர் மாற்றம்

188/15 தாவடி வடக்கு கொக்குவிலைச் சேர்ந்த அலாப்தீன் கலிகாபேகம் ஆகிய எனது பெயரை அலாப்தீன் மைஷா எனப் பெயர் மாற்றம் செய்வதோடு இனி வரும் காலங்களில் மைஷா என கையொப்பமிடுவேன் என தெரியப்படுத்துகின்றேன்.


## வாகனம் விற்பனைக்கு

**Qy xxxx** டீசல் ஆட்டோ **Full Body** விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 642 5049

## வேலையாட்கள் தேவை

K.K.S. வீதி இணுவிலில் உள்ள புத்தகசாலை ஒன்றிற்கு பெண் ஊழியர்கள் தேவை. அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 517 0178


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 • 02 • 1936



மறைவு 22 • 12 • 2020

### அமரர் திருவாளர் கதிர்காமர் கோபாலபிள்ளை

**(உரிமையாளர் கோபாலபிள்ளை ஸ்டோர்ஸ், கோண்டாவில்)**
**இணுவில், யாழ்ப்பாணம்**

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய எமது குடும்பத்தலைவர் அமரர் திருவாளர் கதிர்காமர் கோபாலபிள்ளை அவர்களின் மறைவையொட்டி 31ம் நாள் நினைவஞ்சலியின் மூலம் அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இணுவையூர் ஶ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரை வேண்டுவதுடன் அவர்களின் மறைவுச்செய்தி கேள்வியுற்று நேரிலும், தொலைபேசி மூலம், சமூக வலையைத் தளங்களூடாகவும் தொடர்பு கொண்ட உற்றார், உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**முதலாம் பக்கத் தொடர்ச்சி...**

## வாக்காளர்....

வாக்காளர் பெயர் பட்டியலின் மீள் திருத்தப் பணிகளில் சுமார் 80 சதவீதம் தற்போதைய நிலையில் நிறைவு பெற்றுள்ளன என அவர் தெரிவித்தார். மன்னார் மற்றும் வவுனியா பிரதேசங்களுக்கு மாத்திரம் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய மேலும் 10 நாள்கள் கால எல்லை பெற்றுக் கொடுக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, நேற்றுமுன்தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ.இ)

## இந்திய...

பட்டுள்ளன என்று கடற்படை அறிவித்துள்ளது.

அத்துமீறி மீன்பிடியை மேற்கொண்டபோது இலங்கைக் கடற்படையிடம் இருந்து தப்பித்து ஓடியபோது குறித்த படகு கவிழ்ந்து விபத்துக்கு உள்ளாகியது என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அதில் பயணித்தவர்களைத் தேடும் பணிகள் கடற்படையின் சுழியோடிகள் குழுவால் முன்னெடுக்கப்பட்டன. இதையடுத்து இருவரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-26)

# சிகரெட்டை களஞ்சியப்படுத்த கடன் வழங்கிய அரச வங்கி!

## தவறான நடவடிக்கை என்று அனுரகுமார நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 21

சிகரெட்டின் விலை அதிகரிப்பை கருத்தில்கொண்டு, அவற்றை களஞ்சியப்படுத்த ஏதுவாக அரசுக்குச் சார்பான ஒருவருக்கு அரச வங்கியொன்று கடன் வழங்கியுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்ததார்.

தனியார் நிறுவனம் குறித்த வங்கியின் கட்டுவன கிளையில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 31 ஆயிரத்து 500 லட்சம் ரூபா கடன் கோரியுள்ளது. தனியார் நிறுவனரின் மகன் தற்போது கனியவளத் திணைக்களம் ஒன்றில் தலைவராக உள்ளார். சில அமைச்சர்கள் அண்மையில் கொழும்பில் உள்ள அவரின் வீட்டிலேயே தங்கியிருந்தனர். நான் அவர்களின் பெயர்களைக் கூறுவதில்லை. அரசின் முக்கியப் புள்ளிகள் அனுராதபுரம் சென்றால் அவரின் வீட்டிலேயே தங்குகின்றனர். அவர் குறித்த வங்கியின் கட்டுவன கிளையில் 31 ஆயிரத்து 500 இலட்சம் ரூபா கடன் கோரியுள்ளார்.

கட்டுவன கிளையின் பெறுமதிகூட அந்தளவு இருக்காது. அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் சிகரெட்டின் விலை அதிகரிக்கப்படவுள்ளதால், சிகரெட்டை களஞ்சிப்படுத்தி வைப்பதற்காக அந்த கடன் தொகையை வழங்குமாறு கோரியுள்ளார். அத்தொகையை அவருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கும் பொழுது, வட்டி வீதம் ஒரு வீதம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வங்கியில் சிறந்த முறையில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் ஒருவருக்கு வழங்கப்படுகின்ற சாதாரண வட்டி வீதமே இந்த நிறுவனத்துக்கும் வழங்கப்படுகின்றது. அதற்கான பிணை அந்த சிகரெட் தொகை.

இந்த விடயம் பணிப்பாளர் சபைக்குச் சென்றது. பணிப்பாளர் சபையில் இருந்த பீ.ரத்நாயக்க என்ற பணிப்பாளருக்கு நான் நன்றி கூறுகின்றேன். இந்த கடன் தொகையை நிராகரிப்பதற்கு அவர் மூன்று விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

அரச வங்கி நாட்டின் அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்னிற்பதற்கு அவசியமென அவர் முதலாவதாகக் குறிப்பிட்டுள்ளார். சிகரெட்டை கொள்வனவு செய்வதற்கு கடனை வழங்குவதானால் அது நாட்டின் அபிவிருத்திக்கு எவ்வாறு தாக்கம் செலுத்தும் என அவர் வினவியுள்ளார். சிகரெட் பாவனையை குறைப்பதே அரசின் திட்டம் எனவும் சிகரெட்டை கொள்வனவு செய்வதற்கு அரச வங்கி தலையிடுவதனால், அது அரசின் கொள்கைக்கு முரணாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்..

அரசு வரியை அதிகரிப்பதனால் சிகரெட்டின் விலை அதிகரிக்கும் நிலையில் அந்த சிகரெட் தொகை டொபேக்கோ நிறுவனத்திடம் இருந்தால் அதிகரிக்கும் வரி வருமானம் அரசின் வருமானமாக அமையும். எனவே, அரச வருமானம் திறைசேரிக்கு செல்வதற்கு பதிலாக தனியார் வர்த்தகர் ஒருவருக்கு செல்வதற்கு அனுமதி வழங்குவது இதன் மூலம் இடம்பெறும் என அவர் மூன்றாவது விடயமாக குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கூறியிருந்த போதிலும் அந்த பணிப்பாளர் சபை இந்த கடன்தொகைக்கு அனுமதி வழங்கியுள்ளது, என்று சுட்டிக்காட்டினார். (மஒ.இ)

## 51ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
03.10.1942

மறைவு
02.12.2020

கடந்த 02.12.2020 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் சீனி பாலேந்திரன்**

**திதி: கார்த்திகைமாத அபரபட்ச துதியை**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 21.01.2021 வியாழக்கிழமை மு.ப 09.30 மணிக்கு கீரிமலை தீர்த்தக்கேணியிலும் 23.01.2021 சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும். தாங்கள் குடும்பத்தினருடன் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் வீதி,
அச்சுவேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
077 4446533
077 7296980

## மரண அறிவித்தல்



தோற்றம்
09.10.1937

மறைவு
18.01.2021

திருமதி
**பரமேஸ்வரி முத்துக்குமாரசுவாமி**

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி முத்துக்குமாரசுவாமி கடந்த (18.01.2021) அதிகாலை கைதடியில் அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் முத்துக்குமாரசுவாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஜெயரட்ணம் குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னம்பலம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செந்தில்நாதன் மற்றும் திருமதி பவானிதேவி தம்பிப்பிள்ளை, நல்லநாதன், காலஞ்சென்ற சிற்சபாநாதன் மற்றும் சத்தியநாதன், கதிர்காமநாதன், கைலநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவசோதி முத்துக்குமாரசுவாமியின் அன்புத் தாயாரும், ஜெயராஜா சிவராமகிருஷ்ணனின் வளர்ப்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், திருமதி கண்மணி தாமோதரம்பிள்ளை, மயில்வாகனம் ஆகியோரின் அன்பு மருமகளும், சுப்ரமணியம் விக்னேஸ்வரன், திருமதி சிவஞானேஸ்வரி ஜெயராஜா காலஞ்சென்ற சுப்ரமணியம் மகேஸ்வரன், ஆகியோரின் மைத்துனியும், கஜவதனன், தக்சன், விருத்திகா, உமேஷா, உமேஷ்வன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கைதடியில் உள்ள அவரது இல்லத்தில்18.01.2021 அன்று பகல் 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஊரியான் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 945 1816
077 731 0588

தகவல் : குடும்பத்தினர்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
23 . 06 . 1953



விண்ணில்
19 . 01 . 2013

**அமரர் கனகசுந்தரம் சிவராசா**

**திதி: பூர்வபக்க அட்டமி**

ஆண்டுகள் பல கடந்தாலும்
ஆறவில்லை எம் துயர்

கொயிலாமனை,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16 . 01 . 1935



மறைவு
01 . 02 . 2020

**அமரர் இரத்தினசிங்கம் சின்னம்மா**

**திதி - அட்டமி (21.01.2021)**

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
ஓராண்டாய் சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்துவிட்டான் - நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

கைதடி கிழக்கு, கைதடி.

குடும்பத்தினர்.

# முல்லை. குருந்தூர் மலை ஆய்வில் வெளிப்படைத்தன்மை அவசியம்!

*நாடாளுமன்றில் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை*

**கொழும்பு, ஜன. 21**

**முல்லைத்தீவு குருந்தூர் மலைப்பகுதியில் சிவன் கோவில் அமைந்துள்ள நிலையில் அங்கு மறைமுகமாக தொல்லியல் ஆய்வுகள் நடைபெறுகின்றன. இதனை ஏற்கமுடியாது. ஆய்வுகளில் வெளிப்படைத்தன்மை அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னி மாவட்டத்தில் அரசின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டம் இறுக்கப்பட்டுள்ளது. குருந்தூர் மலைப்பகுதியில் சிவன் கோவில் உள்ளது. 1933 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியில் 'குருந்தூர் மலை' என்றுதான் விளிக்கப்பட்டுள்ளது. ஆரம்பம் முதல் தமிழ் பெயர் இருக்கும் நிலையில் தற்போது எதற்கு அவசர அவசரமாக அகழ்வாய்வு நடக்கின்றது?

கடந்த காலங்களில் தொல்லியல் ஆய்வு என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. திடீரென விகாரைகள் முளைத்தன. எனவே, குருந்தூர் மலை விவகாரத்திலும் எமது மக்களுக்கு சந்தேகம் இருக்கின்றது. மக்கள் வழிபடுவதற்கு தடை இருக்கக்கூடாது என நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பொங்கல்வைத்து வழிபடச்சென்ற மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். இது விடயத்தில் நீதிமன்றத் தீர்ப்பு மீறப்பட்டுள்ளது. அகழ்வாய்வு ஏன் மறைமுகமாக செய்யப்படுகின்றது? வெளிப்படைத் தன்மை அவசியம். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்துவந்து செய்யும் நிலையில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களையும், மாணவர்களையும் இதில் இணைத்துக்கொள்ளுமாறு நாம் கேட்டிருந்தோம். இது சம்பந்தமாக எமது தலைவர் சம்பந்தன் ஐயா, இராஜாங்க அமைச்சர் விதுலவுடன் பேச்சு நடத்தினார். இணைத்துக்கொள்வதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேச்சளவில் மட்டும் அல்லாமல் உறுதிமொழி நடைமுறைக்கு வர வேண்டும். வெளிப்படைத் தன்மையுடன் ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டும். என்றார். (து44)

## குருந்தூர் மலையில் இருந்தது விகாரையாம்

கொழும்பு, ஜன. 21

'குருந்தம்மலே' (குருந்தூர் மலை) எனும் பகுதியில் விகாரையே அமைந்திருந்தது. அதற்கான தொல்லியல் சான்றும் இருக்கின்றது என்று தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் நேற்று 'உதயனிடம்' தெரிவித்தார்.

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் வழங்கிய குறுகிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு.

குருந்தம்மலே பகுதியில் பழமையான விகாரையே இருந்துள்ளது. 'குருந்தத்த' எனும் நூலும் அந்த விகாரையில் வைத்தே எழுதப்பட்டுள்ளது. இதற்கான ஓலைச்சுவடி சான்று உள்ளது. தண்ணிமுறிப்பு குளம் என தற்போது கூறப்படுவது 'மஹிந்த' வாவியாகும். காலப்போக்கில் அப்பகுதியில் உள்ள சிலர் விளக்கேற்றி சிவனை வழிபட்டனர் எனக் கூறப்பட்டாலும், ஆரம்பத்தில் விகாரையே இருந்துள்ளது.

எனினும், குறித்த பகுதியில் விகாரை அமைப்பதற்கு இராஜாங்க அமைச்சர் செல்லவில்லை. தொல்பொருள்கள் தொடர்பில் ஆய்வுநடத்தி அவற்றைப் பாதுகாப்பதற்கான பணியை ஆரம்பித்து வைக்கவே சென்றிருந்தனர். அவ்வாறு செய்வது அந்தப்பகுதியில் உள்ள மக்களுக்கும் நன்மையாக அமையும். தொல்லியல் பொருள்கள் பாதுகாக்கப்பட்டால் அதனைப் பார்வையிடுவதற்கு மக்கள் வருவார்கள். அதன்மூலம் மக்கள் பொருளாதார ரீதியில் நன்மை பெறலாம். இதனை குழப்புவதற்கு சில தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர். ஆகழ்வாய்வுக் குழுவுக்கு அரசியல் அழுத்தங்களின்பேரில் நபர்களை நியமிக்க கூடாது என்றார். (து44)

## இராணுவப் பயிற்சிக்கு எதிராக சரத் பொன்சேகா போர்க்கொடி!

*தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் அரசிடம் அவர் வலியுறுத்து*

கொழும்பு, ஜனவரி 21

'இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கும் திட்டத்தை நடைமுறையில் செயற்படுத்த முடியாது இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்தார் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

'18 முதல் 26 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு ஆறு மாத காலத்துக்குப் பயிற்சி வழங்க 75 பில்லியன் ரூபா தேவைப்படும். தமது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போராடும் இளைஞர்களுக்கு இந்தத் திட்டம் ஊக்கமளிக்கும் என்றாலும், நிதிப் பற்றாக்குறை மற்றும் தளபாட சிக்கல்கள் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தத் தடையாக அமையும்.

இராணுவப் பயிற்சி வழங்க இது போன்ற நிதிய முதலீடு செய்யும் நிலையில் தற்போதைய அரசு இல்லை. இவ்வாறு பொய்யான அறிக்கைகள் மூலம் நாட்டு மக்களைத் திசை திருப்புவதற்குப் பதிலாக தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தற்போதைய அரசு கவனம் செலுத்த வேண்டும்' என்றார். (ம-22)

## ராணுவப் பயிற்சி வேண்டாம் யோகா சிறந்தது

*வலியுறுத்துகின்றது இந்துசமய பேரவை*

யாழ்ப்பாணம், ஜன. 21

அனைத்துப் பிரஜைகளுக்கும் இராணுவப்பயிற்சி வழங்க மேற்கொள்ளப்படும் திட்டங்களை அரசு கைவிட்டு யோகா, தியானம் போன்ற பயிற்சிகளை வழங்கி ஆத்மீகரீதியில் இந்த நாட்டை வழிநடத்தி உலக அரங்கில் நற்பெயரைப் பேண முன்வருமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்தார்.

இராணுவப் பயிற்சியைச் சகலருக்கும் வழங்குவதால் மக்கள் வன்முறைப்பாதைக்குச் செல்ல வழிதிறக்கப்படுவதாகச் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

இராணுவப்பயிற்சியை மக்கள் மயப்படுத்தவிருப்பது இந்த நாட்டுக்கு கேடு விளைவிக்கும். இந்த நாட்டில் அரசுக்கு உண்மையான அக்கறையிருந்தால் யோக, தியானப்பயிற்சிகளை கட்டாயமாக்க வேண்டும். இவை நடைமுறைக்கு வருகின்றபோது நாட்டிலுள்ள அனைத்துச் சிறைச்சாலைகளுக்கும் மூடுவிழா வைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மக்கள் உண்மையான நாகரிகம் படைத்தவர்களாக வாழ்வார்கள். அன்பு, கருணை, தர்மம், சத்யம், வீரம், ஆளுமை என்பவை மக்களிடையே தாமாகவே பரிமளிக்கும். என்று அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

## நல்லாட்சி அரசின் ஊழல் ஒழிப்புக் குழுவின் மோசடியை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு

*ராஜபக்ச அரசு அறிவிப்பு*

கொழும்பு, ஜன. 21

'நல்லாட்சி அரசில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் குறித்த விசாரணை அறிக்கைகள் விரைவில் வெளிவரவுள்ளது. அதேவேளை, ஊழல் ஒழிப்புக் குழுவின் மோசடிகளை ஆராய ஜனாதிபதி ஆணைக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. நல்லாட்சி அரசின் ஊழல், ஒழிப்புக் குழுவின் 22 உறுப்பினர்களுக்கு எதிராக நாடாளுமன்றத்துக்குப் பரிந்துரைகளை பெற்றுக் கொடுக்கும் விதத்தில் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு அமையும், இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் வழக்குத் தொடர சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மத்திய வங்கி பிணைமுறி மோசடி விசாரணைகள் துரிதப்படுத்தப்படவுள்ளன. அதேபோன்று, 2015 - 2019ஆம் ஆண்டு காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் கண்காணிப்புகளை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது' என்றார். (ம-22)

## பொலிஸார் தாக்கினரென ஒருவர் மருத்துவமனையில்

கொடிகாமம், ஜன. 21

பொலிஸார் தாக்கினர் என்றுகூறி பாலாவியைச் சேர்ந்த ஒருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நேற்றுச் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

தான் குடியிருக்கும் காணிக்குள் கோவில் ஒன்று இருக்கிறது அந்தக் கோவிலைச் சுற்றி பள்ளம் இருப்பதால் வெள்ளம் தேங்கி நிற்கிறது அதனை நிரவுவதற்காக எனது காணிக்குள் மணல் ஏற்றிக்கொண்டிருந்தபோது இராணுவத்தினர் என்னைப்பிடித்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர் அதன் பின்னர் இரவிரவாக கொடிகாமம் பொலிஸார் என்னைத் தாக்கினர் என்று அவர் கூறியுள்ளார்.

பாலாவி தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்தவரே மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்ந்துள்ளார்.

இதுபற்றி கொடிகாமம் பொலிஸாரிடம் கேட்டபோது, விடத்தற்பளையைச் சேர்ந்த இருவர் மணல் அகழ்வில் ஈடுபட்டனர் என்றுகூறி இராணுவத்தினர் ஒப்படைத்தனர். அவர்கள் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். குறித்த நபரைப் பொலிஸார் தாக்கவில்லை என்று தெரிவித்தனர். (து-159)

## மாணவர் கௌரவிப்பு



கிளிநொச்சி மாசார் அ.த.க. பாடசாலையின் 2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் 2019 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை அதிபர் த.ஜெபதாஸ் தலைமையில் நடைபெற்றது. (து159)

## ராஜபக்ச அரசு...

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயம் மற்றும் தமக்கான கடமைகளை நிராகரித்தல் போன்ற தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மேற்கோளிட்டு அறிக்கையொன்றை குறித்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறித்த அறிக்கையில், பத்து வழக்குகளை ஆராய்ந்து இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பின் தோல்விகள் மற்றும் குறைபாடுகளை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் அடையாளப்படுத்தியுள்ளது. இந்த வழக்குகளில் பெரும்பாலானவற்றில், பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் ஒருதசாப்தத்துக்கும் மேலாக நீதிக்காகக் காத்திருக்கின்றனர்.

இதற்கிடையில் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை மற்றும் திருகோணமலையில் ஐவர் கொல்லப்பட்ட சம்பவங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி தவிர்க்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த விடயத்தில் தற்போதைய அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட கட்டமைப்பு மற்றும் சட்டச் சீர்திருத்தங்களுக்கான அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்த நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பு மூலம் எப்போதும் நீதி பெறுவதில் நம்பிக்கையை இழந்து வருகின்றனர். எனவே விரிவான மற்றும் உண்மையான சீர்திருத் தங்கள் மூலம் அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்வது கட்டாயமாகும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம)

## மேலும்...

யைச் சேர்ந்த 2 தாதியர்களும் 2 ஊழியர்களும் அடங்குகின்றனர் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மாதிரிகள் பெறப்பட்ட 3 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிகாட்டினார்.

மேலும் கொரோனாத் தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தனர் என்ற அடிப்படையில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 11 பேருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பொதுமருத்துவமனையின் மருத்துவ விடுதியில் கொரோனாத் தொற்றுக்குட்பட்ட நோயாளிகள் இருவர் கடந்த வாரம் அடையாளம் காணப்பட்ட நிலையில் அந்த விடுதியில் பணியாற்றிய மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நோயாளிகள் எனப் பலர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். இந்த நிலையில் தாதிய உத்தியோகத்தர் ஒருவரும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகினார் எனக் கண்டறிப்பட்டது. இதையடுத்து சிலர் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களிலேயே நால்வருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. (ம-26)

## 10 நாள்களின்...

னர் நேற்றையதினமே எவரும் கொரோனாத் தொற்றுக்கு உட்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

வவுனியா பட்டாணிச்சூர் மற்றும் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் பணியாற்றும் பலருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. நேற்றுவரை 255 தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். எனினும் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் எவருக்கும் தொற்றில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ம-110)

## கொரோனா சாவு...

அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 274ஆக அதிகரித்துள்ளது.

மல்லவகெதர பிரதேசத்தைச் சேர்ந்த, 53 வயதான பெண் ஒருவர், நீர்கொழும்பு மாவட்ட பொதுமருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்புத் தேசிய தொற்று நோய் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் அங்கு நேற்று உயிரிழந்துள்ளார். அவரது சாவுக்கான காரணம், கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நிமோனியாவால் குருதி விஷமடைந்தமை மற்றும் உக்கிர நீரிழிவு நிலை என அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாவால் இதுவரை 274 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களில் 261 பேர் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

## தமிழர்களின்...

எண்ணப்பாட்டை தோற்றுவிக்கிறார்கள். குருந்தூர் மலை விவகாரத்தில் தமிழ் மக்களின் மத உரிமைகள் ஏதும் ஒடுக்கப்படவில்லை இவ்வாறு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவில் குருந்தூர் மற்றும் மணலாறு படலைகல்லு பகுதியில் விகாரைகள் மற்றும் பௌத்த துறவிகள் வாழ்ந்தமைக்கான சான்றாதாரங்கள் கிடைக்கப் பெற்றன. இதனைத் தொடர்ந்து தொல்லியல் திணைக்களம் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இந்தச் சம்பவத்தைக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு அரசியல்வாதிகள் தவறான கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார்கள். தேசிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு அனைத்து இன மக்களுக்கும் உண்டு. தமிழ் அரசியல்வாதிகளே தேவையற்ற பிரச்சினைகளை தோற்றுவிக்கிறார்கள்.

தமிழ் மக்களின் மதம் மற்றும் கலாசார அம்சங்களை ஒடுக்க வேண்டிய தேவை அரசுக்கு கிடையாது. குறித்த பிரதேசம் தொல்லியல் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்ற காரணத்தால் ஆராய்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மாத்திரமல்ல அனைத்து மாகாணங்களிலும் வரலாற்றுச் சின்னங்கள் புதைந்துள்ளன என்றார். (ம-ஓ)

## வேதனையின்...

ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இஸ்லாம் பற்றிய பூரண அறிவைப் புரிந்துகொள்ள, புனித அல்குர்ஆனுடன் சேர்த்து, அது அருளப்பட்ட பூரண பின்புலங் களை விளக்கும் ஹதீஸ்களையும் நல்லெண்ணத்துடன் அமைச்சர் உதய கம்மன்பில படிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் பேசிய அமைச்சர் உதய கம்மன்பில, அல்குர்ஆனை தான் படித்தார் எனவும், 'இறந்தவர்களின் உடல்களை எரிப்பது ஹறாம் என எங்கும் கூறப்படவில்லை எனவும் கூறியிருந்தார். அதற்குப் பதலளிக்கும் வகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் நேற்று சபையில் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அல்குர்ஆனை மாத்திரமல்ல, ஸ்சையும் சேர்த்துப் படியுங்கள். நல்லெண்ணத்துடன் இவைகளைப் படித்தால் சரியான தெளிவைப் பெறுவீர்கள். நாட்டின் இறைமைக்கும், ஒற்றுமைக்கும், ஏன் சுதந்திரத்துக்கும் கூட பாடுபட்டது முஸ்லிம் சமூகம். எனினும், கொரோனாவால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றோம்.

எமது கண்ணுக்கு முன்னே சடலங்கள் பலவந்தமாக எரிக்கப்படுகின்றன. புகழ் பெற்ற நிபுணர்களும், இந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற மருத்துவ வல்லுநர்களும் ஜனாஸாக்களை அடக்கம் செய்யலாம் எனச் சொன்ன பிறகும் இந்த அரசு, எதையும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை' என்றார். (ம-22)

## ராஜபக்சவினரை...

நாயக்க கொத்தலாவல பரம்பரை, பண்டாரநாயக்க ரத்வத்தே பரம்பரை, ஜயவர்தன விக்கிரமசிங்க பரம்பரை மற்றும் 2005ஆம் ஆண்டின் பின்னர் ராஜபக்ச பரம்பரை ஆகிய நான்குமே பொறுப்பேற்க வேண்டும். அவற்றில் ராஜபக்ச குடும்பம் அதிகாரத்தைத் துறப்பதற்குத் தயார் நிலையில் இல்லை என்பதுடன் சமுதாயத்தின் அனைத்துக் கட்டமைப்புக்களையும் ஆள்வதற்கு முற்படுகின்றது.

எமது எதிர்கால சந்ததியினர் மத்தியில் பெரும் சமுதாய மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு நாம் முன்னின்று செயற்பட வேண்டும். தற்போது நாட்டை ஆட்சி செய்கின்ற, எதிர்காலத்திலும் ஆட்சி செய்வதற்கு எதிர்பார்த்திருக்கும் ராஜபக்ச குடும்பத்துக்கு அந்த இயலுமை இல்லை என்பது அவர்களது கடந்தகாலச் செயற்பாடுகளின் மூலம் உறுதியாகியிருக்கிறது.

தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடி நிலைக்கு கடந்த 70 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்தவர்களே பொறுப்புக்கூற வேண்டும் என பரவலாகக் கூறப்படுகின்றது. எமது நாடு இலவசக்கல்வி, இலவச சுகாதாரசேவை ஆகியவற்றில் சிறந்த இடத்தில் இருந்தாலும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை அது சிறந்த இடத்தை அடையவில்லை. இந்த நிலையில் எமது எதிர்கால சந்ததியினருக்கு இரத்தம் தோயாத சமுதாயமொன்றைக் கையளிக்கும் பொறுப்பு எமக்கு உள்ளது. இதனை உருவாக்குவதற்கு எவ்வித இன, மத, அரசியல், கட்சிபேதங்களுமின்றி திறமையுடைய அனைவருக்கும் அழைப்பு விடுக்க வேண்டும்' என்றார். (ம-22)

## மாகாண சபைத்...

தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு தயாராகவே உள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு மக்கள் தமது ஜனநாயக உரிமைகளுடன் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு. மாகாண சபை நடைமுறை நாட்டில் தற்போதும் உள்ளது. அதன் அமைச்சுக்கள் மற்றும் பொறிமுறைகள் அனைத்தும் நடைமுறையில்தான் உள்ளன. எனினும் அவை ஆளுநர்கள் மற்றும் அதிகாரிகளால் செயற்படுத்தப்படுகின்றது. அதனை முழுமையாகக் கருத முடியாது. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதன்மூலம் மக்களின் உரிமையும் ஜனநாயகமும் பேணப்பட வேண்டும் என்றார். (ம)

## தமிழ் மக்கள்...

ரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். முப்பது ஆண்டுகால போரில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க அரசு எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்காது, அவர்களைத் தொடர்ந்தும் வறுமைக்கோட்டின் கீழ் வைத்திருக்கவே முயற்சிக்கின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் அடக்குமுறையை கையாளவே இந்த அரசு முயற்சிக்கின்றது. தமிழ் மக்களின் வாழ்வாதாரம் தொடர்பாகக் கவனம் செலுத்துவதை விடுத்து, வடக்கு, கிழக்கில் புதிதாக பௌத்த விகாரைகளை அமைத்தல், நில ஆக்கிரமிப்பு போன்ற விடயங்களுக்கே அரசு முக்கியத்துவம் கொடுக்கின்றது. வடக்கில் போர்க் காலத்தில்கூட தமிழர்கள் சென்று வழிபட்ட குருந்தூர் மலை பிரதேசத்தை தற்போது தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளது. எனினும், 1933ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இது தமிழர் பகுதி என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாகத் தமிழர்கள் இந்த இடத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

எனினும், இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியை இராணுவம் சுற்றி வளைத்து ஆக்கிரமித்துள்ளது. இதனால் தைபொங்கல் தினத்தில் தமிழர்கள் அங்கு செல்ல முடியாத நிலைமை உருவாகியது. கேட்டால் தொல்பொருள் திணைக்களம் இந்த இடத்தில் ஆய்வுகளைச்செய்கின்றதுஎனக்கூறியுள்ளனர். 2018ஆம் ஆண்டில் இந்த இடத்தில் பௌத்த தேரர் ஒருவர் புத்தர் சிலை ஒன்றை வைத்து பௌத்த விகாரையை அமைக்க முயற்சித்தார். பின்னர் நீதிமன்றம் இதற்கு இடைக்காலத் தடை விதித்து அந்த நடவடிக்கையைத் தடுத்தது. மீண்டும் இதே இடத்தில் தொல்பொருள் திணைக்களம் ஆய்வுகளை மேற்கொள்கின்றது எனக் கூறி விகாரை ஒன்றை அமைக்கும் முயற்சிகளை எடுத்துள்ளனர். ஏனைய மாவட்டங்களில் வாழும் மக்களுடன் போட்டிபோடக் கூடிய நிலைமையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரம் இல்லை. இதனால் எமது மக்களை இலக்கு வைத்து நடத்தும் அடக்குமுறையை ராஜபக்ச அரசு உடன் நிறுத்த வேண்டும்' என்றார். (ம-22)

# சென்னை சுப்பர் கிங்ஸ் ரெய்னாவை தக்கவைப்பு

## வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி

**சென்னை, ஜன. 21**

**இந்த வருட ஐ.பி.எல் தொடரில் தாம் தக்கவைத்த வீரர்களின் விவரங்களை அணிகள் வெளியிட்டுள்ளன. சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ரெய்னாவைத் தக்கவைத்தது. அணித் தலைவரான டோனியும் துணைத் தலைவராக ரெய்னாவும் செயற்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**




முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கடந்த வருட ஐ.பி.எல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் தடுமாற்றம் காட்டியது. பிளே ஆப் சுற்றுக்குத் தகுதி பெறாமல் வெளியேறியது. இந்தப் பெரும் சரிவுக்கு ரெய்னா அணியில் இருந்து விலகியமையும் ஒரு காரணம். அணி நிர்வாகத்துடன் ஏற்பட்ட முரண்பாட்டால்தான் ரெய்னா விலகினார் என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டாலும் இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதனால் இந்த வருடத்துக்கான ஐ.பி.எல் தொடரில் ரெய்னா சென்னை அணியில் இருப்பாரா அல்லது நீக்கப்படுவாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ரெய்னாவைத் தக்கவைத்தது சென்னை சுப்பர் கிங்ஸ்.

அதேநேரம் ஹர்பஜன் சிங், முரளி விஜய், கேதர் யாதவ், சாவ்லா, வற்சன் ஆகியோரை சென்னை சுப்பர் கிங்ஸ் விடுவித்தது. (ம)



# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இந்திய அணி முதலிடத்தில்!

புதுடெல்லி, ஜன. 21

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரப்படுத்தலில் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது. ஆஸ்திரேலியாவில் வைத்து ஆஸ்திரேலியாவை வீழ்த்தியதை அடுத்து இந்த பெரும் அடைவு இந்திய அணிக்குக் கிடைத்தது. 430 புள்ளிகளுடன் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது. இரண்டாவது இடத்தில் நியூசிலாந்து அணி 420 புள்ளிகளுடனும், ஆஸ்திரேலியா 332 புள்ளிகளுடனும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இங்கிலாந்துக்கு எதிரான தொடரை இந்திய அணி 2:0 என்று கைப்பற்றும் பட்சத்தில் இந்திய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறுவது உறுதியாகும். (ம)

**வேலை வாய்ப்பு**
யாழ்நகரில் இயங்கும் பலசரக்கு கடைக்கு கணினி மூலம் பில்போடுவதற்கும், பொருட்கள் பொதிசெய்வதற்கும் ஆட்கள் தேவை.
**தொடர்பு: 077 628 0685**

**வேலையாட்கள் தேவை**
மல்லாகத்தில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு பிஸ்கட் தயாரிப்பதற்கும், பொதி செய்வதற்கும் ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
வயது எல்லை 18 தொடக்கம் 40 வரை
**தொடர்பு:074 049 0003**

**சிறுநீரகம் தேவை**
B/O குரூப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொடர்பு: **076 239 9874**



# மலிங்கவை விடுவித்தது மும்பை இந்தியன்ஸ்!

மும்பை, ஜன. 21

நடப்பு வருட ஐ.பி.எல் தொடர் விரைவில் ஆரம்பிக்கவுள்ள நிலையில், ஒவ்வொரு அணிகளும் தாம் தக்கவைத்த மற்றும் விடுவித்த வீரர்களின் விவரங்களை வெளியிட்டுள்ளன. மும்பை இந்தியன்ஸ் அணி மலிங்கவை விடுவித்தது.

மலிங்க, மெக்கலினகன், பட்டின்சன், கூட்டர் நைல், ரதபோர்ட் உள்ளிட்ட ஆறு வீரர்கள் மும்பை அணியால் விடுவிக்கப்பட்டுள்ள னர்.

சில வேளைகளில் ஏலத்தின் மூலம் மலிங்கவை மீண்டும் தனதாக்க மும்பை முனையலாம்.

ஆனால், மும்பை அணி தனது சமூக வலைத் தளங்களில் மலிங்க உள்ளிட்ட விடுவிக்கப்பட்ட வீரர்களுக்கு 'நன்றிக் குறிப்புகள்' பதிவிட்டுள்ளதால் ஏறக்குறைய மும்பையுடனான இவர்களின் ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிட்டதாகவே கருதப்படுகின்றது. (ம)

**வேலைவாய்ப்பு!**
ANDRA PRINTERS நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
**ஒப்பு நோக்குநர்**
**(Proof Reader)**
**தகைமைகள்:**
- தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் ஒப்பு நோக்கும் திறன் உள்ளவர்களாக இருத்தல்வேண்டும்.
- முன் அனுபவம் விரும்பத்தக்கது.

சனிக்கிழமை (23.01.2021) காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை நேர்முக தேர்வு நடைபெறும்.
நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:
ANDRA PRINTERS
379,Kasthuriyar Road,
Jaffna.
0776622981 | 0777481696

## துயர் பகிர்கிறோம்



**அமரர்.ஜெகசோதி ஞானச்சந்திரன்**
(வேலணை மத்திய கல்லூரி)

மலர்வு : 24.08.1956
உதிர்வு : 19.01.2021

சரசாலை மெய்கண்டான் வீதியை (மட்டுவில்) பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி, சரவணை மற்றும் கனடா Toronto ஐ வதிவிடமாகவும் கொண்ட திரு.ஜெகசோதி ஞானச்சந்திரன் 19.01.2021 புதன்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஜெகசோதி சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற திரு.முத்துலிங்கம், திருமதி தவமலர் தம்பதிகளின் மருமகனும் அருட்செல்வியின் அன்புக்கணவரும், கிரிசா, கீர்த்திகா, கீரா, ஜோசிவா, ஜோன், கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தசீபன், ரிஷி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தியடோர் இன் அன்புப்பேரனும் இராமச்சந்திரன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் (ஜேர்மனி), சந்திரபவானி, கலாஜோதி (ஜேர்மனி), திருமகள், ஞானசூரியன் (ஜேர்மனி), கலைச்செல்வி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பீற்றா (ஜேர்மனி), சரவணபவன், பரமேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், பத்மாதேவி (ஜேர்மனி), நடராஜா (நோர்வே), அன்பரசி (கனடா), எழில்வண்ணன் (கனடா), மதிவண்ணன் (கனடா), மதுரா ஜோதி, வானதி, கபிலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துணரும், கிரிசன், ஹாய், அனிஷா - (ஜேர்மனி), வாகீஷன் - சுகாசினி, சேயோன் - நிஷானி, ஹம்ஷா, லக்ஷன், சுதீபன் - சசிறேகா, றொபின்சன் - சுவர்ணறேகா (ஜேர்மனி), சுஜீவன் - சுசாந்தா, சுபித்தான் - நிருஜா (ஜேர்மனி), சுபித்தா, ஜானுஷா, நயனன், லவன், கௌதம், பிரவீன் - (ஜேர்மனி), நிமலன், கவிஸ்நயன், அக்ஷதன் - (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

**தகவல் குடும்பத்தினர்:**

ஜெகசோதி இராமச்சந்திரன் (சகோதரன்) T.P : 0776 - 171474
திருமகள் விக்கினேஸ்வரன் (சகோதரி)
மெய்கண்டான் வீதி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
திருமதி.ஞானச்சந்திரன் (கனடா) T.P : 0016 - 475335640
ஞானசூரியன் பத்மாவதி (ஜேர்மனி) T.P : 0049 - 02234207826
கலாஜோதி பரமேஸ்வரன் (ஜேர்மனி) T.P : 0049 - 21623600890
கலைச்செல்வி நடராஜா (நோர்வே) T.P : 0047 - 91745082



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.01.2021இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.